விலை: 30.00
website : www.valampurii.lk
viber : 076 636 3378
பக்கங்கள் : பதினாறு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 24 வெள்ளிக்கிழமை (10.12.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 356

### 11 தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்ட விவகாரத்தில் குற்றம் சாட்டப்பட்ட கரன்னாகொட

## வடமேல் ஆளுநராக கோட்டாவால் நியமனம்



(கொழும்பு)

கொழும்பில் 11 தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட விவகாரத்தில் குற்றம் சாட்டப்பட்ட முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொட வடமேல் ஆளுநராக ஜனாதிபதி கோட்டாவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

(3ஆம் பக்கம் பார்க்க)

## குற்றவாளிக்கு ஆளுநர் பதவியா?

### சுமந்திரன் எம்.பி கண்டனம்

(கொழும்பு)

குற்றவாளியான வசந்த கரன்னாகொட ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளமைக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கண்டனம் வெளியிட்டுள்ளார். பாராளுமன்றில் நேற்று உரையாற்றிய அவர் இதனை கூறியுள்ளார்.

15

## கொலையாளிக்கு ஆளுநர் பதவியா?

### மனோ எம்.பி கடும்எதிர்ப்பு

(கொழும்பு)

கொலைக் குற்றம் சாட்டப்பட்ட முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரன்னாகொடவிற்கு ஆளுநர் பதவி வழங்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில், பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் எதிர்ப்பு தெரிவித்துள்ளார். முகப்புத்தகத்தில் விடுத்துள்ள பதிவொன்றில் அவர்

15

## கொரோனா +744

(கொழும்பு)

கொரோனா தொற்று உறுதியான மேலும் 744 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ம-03)

## கொரோனா 22 பேர் பலி

(கொழும்பு)

கொரோனா தொற்றால் நாட்டில் மேலும் 22 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதற்கமைய

15

### 2022 ஆம் ஆண்டில் அரச சேவைக்கு

# ஊழியர்கள் எவரையும் இணைக்க மாட்டோம்

### நிதி அமைச்சர் பசில் அறிவிப்பு



(கொழும்பு)

2022 ஆம் ஆண்டில் அரச சேவைக்கு ஊழியர்கள் எவரையும் இணைத்துக்கொள்ள மாட்டோம் என நிதி அமைச்சர் பசில் ராஜபக்ச அறிவித்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் கைதிகள் விடயத்தில் பெரிய மாற்றங்கள் வரும்

### பாராளுமன்றில் நீதி அமைச்சர் அலி சப்ரி

(கொழும்பு)

பயங்கரவாத தடைச் சட்டத்துடன் தொடர்புடைய வழக்குகளைத் தாங்கள் உன்னிப்பாக ஆராய்வதுடன், அதில் பெரிய மாற்றங்கள் வரும் என நீதி அமைச்சர் அலி சப்ரி நேற்று பாராளுமன்றில் தெரிவித்துள்ளார்.

15

### யாழ். மாநகர சபையின்

## வரவு-செலவுத் திட்டம் ஏகமனதாக நிறைவேறும்

### முதல்வர் மணிவண்ணன் நம்பிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு, செலவுத்திட்டம் மாநகர சபை உறுப்பினர்களினால் ஏகமனதாக அங்கீக

15

## வாகன இறக்குமதிக்கு அடுத்த வருடமும் தடை

### நிதி அமைச்சர் பசில்

(கொழும்பு)

2022ஆம் ஆண்டில் வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்

15

## கொலையாளிகளுக்கு அரசு பொது மன்னிப்பு

### சபையில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

(கொழும்பு)

இலங்கையில் குற்றவாளிகள், கொலையாளிகள் மற்றும் திருடர்களுக்கே பொதுமன்னிப்பு வழங்கப்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார். இது நாட்

15

### யாழ்ப்பாணத்தில்

## விபத்துக்குள்ளான முதியவர் மரணம்


(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் 4ஆம் குறுக்குத் தெரு பகுதியில் இடம்பெற்ற விபத்தில் சிக்கி படுகாயம் அடைந்திருந்த முதியவர் ஒருவர் சிகிச்சை பலனின்றி

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## சின்னப்பா கணபதிப்பிள்ளை

மண்டைதீவு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் மண்டைதீவு 8ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பா கணபதிப் பிள்ளை நேற்று (09.12.2021) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பா - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும் நாகரெத்தினம் - இரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற இராஜேஸ்வரியின் அன்புக் கண வரும் மதிகரன், மதிவதனி, மதிவாணி, மதியழகன், கஜந்தினி, கஜந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான நடராசா, வேலுப்பிள்ளை, இராசம்மா, செல்லம்மா, இராசரெத்தினம் மற்றும் தில்லைநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (10.12.2021) வெள்ளிக் கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக் காக மண்டைதீவு தலைக்கீரி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**8ஆம் வட்டாரம்,**
**மண்டைதீவு.** (8995)

*தகவல்:* **குடும்பத்தினர்**
**ச.சத்தியசீலன் (சத்தி) மருமகன்**

# காணி விற்பனைக்கு

யாழ். சுன்னாகம் நகரத்தின் மத்தியில் K.K.S வீதியில் இருந்து 200 மீற்றர் தூரத்தில் (இலங்கை வங்கி முன் வீதியில்) 12 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (1 1/2 பரப்பாக பிரித்து வழங்கப்படும்.)

(8997)

தொடர்புகளுக்கு

**077 890 9259, 077 015 0353**

# காணி விற்பனைக்கு

கோப்பாய் - உரும்பிராய் பிரதான வீதியில் இருந்து 500 M தூரத்தில் 4 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு. 1 1/2 பரப்பாக பிரித்து வழங்கப்படும். (உரும்பிராய் கிருஸ்ணன் கோவில் சந்தி அருகாமை)

(8997)

தொடர்புகளுக்கு

**077 658 5999**
**077 623 4204**



# பாராட்டி வாழ்த்துகின்றேன்

தஞ்சைப் பல்கலைக்கழகத்தால் ஆண்டுதோறும் வழங்கப்படும் உயரிய விருதான **"இராஜராஜ சோழன்"** விருதையும் (தமிழ் பாடத்திற்கான First Class with Distinction) வென்றமை மனநிறைவைத் தந்தது. இன்றைய தமிழ்ச் சிறப்புப் பட்டத்தினை

**கனகரட்ணம் செந்தூரன்**
B.A Hons Tamil Spl.

பெற்றுக்கொண்டதை மனதார வாழ்த்துகிறேன்

Best Wishes!

**க.கருணானந்தன்**
அதிபர்
கிளி/முருகானந்த ஆரம்ப வித்தியாலயம்

(C-3212)

யா/கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியை திருமதி சித்திராதேவி ஞானசுப்பிரமணியம் அவர்களின்

# மணிவிழா வாழ்த்து

## வலயக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துரை

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் உள்ள யா/ கொக்கு வில் இந்துக் கல்லூரியில் ஆசிரியையாகக் கடமையாற்றிய திருமதி சித்திராதேவி ஞானசுப்பிரமணியம் ஆசிரியர் சேவை யிலிருந்து ஓய்வுபெற்றுள்ளார். எமது வலயத்திலுள்ள பல பாடசாலைகளில் வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் கற்பிக் கும் ஆசிரியையாக சிறப்பாகப் பணியாற்றியவர்.

இவரது கல்விப் பணி ஓய்வுகாலத்திலும் சமூகத்திற்கு தொடர்ச்சியாகக் கிடைக்க வேண்டும். இவரது பணி மென் மேலும் சிறக்க பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரி வித்துக் கொள்கின்றேன். எமது வலயத்திலிருந்து ஓய்வு பெறும் இவ் ஆசிரியையின் ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

**மு.இராதாகிருஷ்ணன்**
**வலயக்கல்விப் பணிப்பாளர்,**
**வலயக்கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.**

## பல்துறை ஆளுமைமிக்க ஆசிரியையின் மணிவிழா வாழ்த்து

எமது கல்லூரியில் 2012இல் ஆசிரியையாக இணைந்து இன்றைய தினம் அகவை அறுபதை நிறைவு செய்யும் திருமதி சித்திராதேவி ஞானசுப்பிரமணியம் அவர்களின் மணிவிழா வாழ்த்துச் செய்தியைப் பகிர்வதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறோம்.

இவர் எமது பாடசாலையில் வணிகத்துறை ஆசிரியை யாகவும் நூலகப் பொறுப்பாசிரியராகவும் தேசிய கல்வி நிறுவகத்தின் பகுதிநேர விரிவுரையாளராகவும் பணிபுரி யும் வாய்ப்புப் பெற்றவர்.

மாணவர்களுடன் அன்பாகப் பேசிப் பழகி அரவணைக் கும் தன்மையும் ஆசிரியர்களுடன் எளிமையாகவும் பண்பாகவும் பழகும் அழகும் ஏனையவர்களை மதிக்கும் பண்புடைய இவர் 34 ஆண்டுகால சேவையைப் பூர்த்தி செய்து ஓய்வுபெறும் இவ்வேளையில் பல்லாண்டு காலம் தனது உறவுகளுடன் இணைந்து வாழ எல்லாம்வல்ல இறைவனை வேண்டிக் கொள்வதுடன் எமது மனமார்ந்த நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்,**
**யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.**



## திருமதி சித்திராதேவி ஞானசுப்பிரமணியம்

(B.Com, P.G.D.in Education, M.phil)

**சேவை விபரம்**

| | |
|---|---|
| கிளி/அக்கராயன் ம.வி.:- | 14.12.1987 - 06.02.1992 |
| யா/முத்துத்தம்பி ம.வி. :- | 07.02.1992 - 23.02.1998 |
| யா/இந்து மகளிர் கல்லூரி :- | 24.02.1998 - 10.10.2012 |
| யா/முத்துத்தம்பி ம.வி.:- | 11.10.2012 - 18.11.2012 |
| யா/கொக்குவில் இந்துக் கல்லூரி :- | 19.11.2012 - 09.12.2021 |

(9000)

## மணிவிழா நாயகிக்கு வாழ்த்துக்கள்

எமது கல்லூரியில் தனது கல்விச் சேவையை 09.12.2021 அன்று நிறைவு செய்து மணிவிழாக் காணும் நாயகி திருமதி சித்திராதேவி ஞானசுப்பிர மணியம் அவர்களை வாழ்த்துவதில் மகிழ்வெய்து கிறேன்.

மாணவச் செல்வங்களுக்கு வணிகக்கல்வியைத் திறம்படக் கற்பித்து சிறந்த பெறுபேறுகளை கல்லூரிக் குப் பெற்றுத் தந்தவர் என்ற பெருமையைப் பெற்றுக் கொள்ளும் இவர், கல்லூரியின் வடபகுதி நூலகத் தின் பொறுப்பாசிரியையாக நீண்டகால சேவையை வழங்கியுள்ளார்.

மாணவர்களுக்கு நூலக ஒழுக்க விழுமியங்களைக் கற்றுக் கொடுத்ததுடன் வாசிப்பு மாத போட்டிகளில் மாணவர்களை வருடாவருடம் பங்குபற்ற ஊக்கு வித்தமையுடன் மாகாண, தேசிய மட்டத்தில் பரிசில்கள் பெற்று கல்லூரிக்குப் புகழ்சேர்த்தவர் என்பது குறிப் பிடத்தக்கது.

இவரது வழிகாட்டலின்கீழ் மத்திய கல்வி அமைச் சின் விசேட நாடளாவிய ரீதியிலான போட்டித் தெரி வின் அடிப்படையில் நூலக வாசிப்பு தொடர்பில் 5 மாணவர்கள் பிளாற்றினம் விருதுடன் சீன நாட்டுக் கான பிரயாணத்துக்கு தெரிவு செய்யப்பட்டமை இவ ரது நூலக சேவையில் இவருக்கு கிடைத்த மணி மகுடம் ஆகும்.

பாடசாலைச் சமூகத்துடன் சுமுகமான உறவைக் கொண்டிருந்த ஆசிரியை தனது ஓய்வுநிலைக் காலங் களிலும் மாணவருக்கான கல்விப் பணியைத் தொடர வும் அகமகிழ்வுடன் உறவுகளுடன் வாழவும் இறை அருளை வேண்டி நிற்கின்றேன்.

**ம.ஞானசம்பந்தன்**
**அதிபர்,**
**யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.**

**ஆசிரியர் நலன்புரிக் கழகம், யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11 இளைஞர் கடத்தல் விவகாரம்

# குற்றம் சாட்டப்பட்ட கரன்னகொட வடமேல் ஆளுநராக நியமனம்

(கொழும்பு)

**வடமேல் மாகாண ஆளுநராக கடற்படையின் முன்னாள் தளபதி வசந்த கரன்னாகொட நியமிக்கப்பட்டுள்ளார் என ஜனாதிபதி ஊடகப் பேச்சாளர் கிங்ஸ்லி ரத்னாயக்க தெரிவித்தார்.**



வடமேல் ஆளுநராக பணியாற்றிய ராஜா கொல்லுரே உயிரிழந்ததையடுத்து இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

2008 மற்றும் 2009ஆம் ஆண்டுகளில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்ட வழக்கில் முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொடவிற்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

எனினும், 11 இளைஞர்கள் கடத்தப்பட்ட வழக்கில் முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரன்னாகொட மீது குற்றச் சாட்டுகளை தொடர முடியாது என சட்டமா அதிபர் திணைக்களம் நீதிமன்றத்தில் அறிவித்திருந்தது.

இந்தநிலையிலேயே தற்போது கடற்படையின் முன்னாள் தளபதி வசந்த கரன்னாகொட வடமேல் மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார். (நி)

# தொடரும் வெடிப்புச் சம்பவங்கள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - சந்திவெளி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மாவடி வேம்பு சம்பந்தர் வீதியிலுள்ள வீடொன்றிலும் நேற்று முன்தினம் பகல் எரி வாயு அடுப்பு தீப்பற்றியுள்ளது. வீட்டிலிருந்தவர்கள் சமைத்துக் கொண்டிருந்த போது இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வெடிப்புச் சத்தம் கேட்டதை அடுத்து அடுப்பிலிருந்து எரிவாயு சிலிண்டரை வீட்டின் உரிமையாளர் அகற்றியுள்ளார். இதனைவிட கம்பளை வெலம்பொட பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட எல்பிட்டிய பகுதியிலுள்ள வீடொன்றிலும் நேற்று முன்தினம் பகல் எரிவாயு அடுப்பு தீப்பற்றியுள்ளது.

எரிவாயுவுடன் தொடர்புடைய தீப்பற்றல் சம்பவங்கள் தொடர்ச்சியாக பதிவாகி வருவதால், அச்சத்தில் வீட்டிற்கு வெளியே அடுப்பை வைத்தே சமைத்து வந்துள்ளதாக தெரிவித்தனர். இந்த நிலையில், அடுப்பு அணைக்கப்பட்டிருந்த சந்தர்ப்பத்தில் திடீரென தீ பரவியுள்ளது. (நி)

# வீதியை முழுமையாக புனரமைக்க கோரிக்கை

(கரணவாய்)

கரவெட்டி மேற்கு முதலியார் வீதி சுமார் நான்கு மாதங்களுக்கு முன் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையினால் கருங்கற்கள் பறிக்கப்பட்டு வீதி அரை குறையாக போடப்பட்ட நிலையில் உள்ளது.

இவ்வீதியில் மின் விளக்கு தூண் ஒன்று காணப்படுகிறது.

அதனை அகற்றி வீதியை முழுதாகப் போட்டுத் தருமாறு பலமுறை கிராம மக்கள் கேட்டுக் கொண்ட போதும் இது வரை கவனம் செலுத்தப்படவில்லை.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வீதியிலுள்ள மின் விளக்குத் தூணை அகற்றி வீதியை முழுமையாகப் புனரமைப்புச் செய்து தருமாறு கேட்டுக் கொண்டுள்ளனர். (5-6)

## மக்களை பட்டினியால் சாகடிக்கப்போகும் அரசு

# ஐக்கிய தேசியக் கட்சி எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டு மக்களை இந்த அரசு பட்டினியால் சாகடிக்கப் போகின்றது என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்த்தன எச்சரிக்கை விடுத்தார்.

அரசால் நாட்டு மக்கள் பாரிய கடன் சுமைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். அடுத்த ஆண்டில் இந்த கடன் சுமையால் நாட்டினதும், மக்களினதும் பொருளாதாரம் பாரியளவில் வீழ்ச்சியடையும்.

தற்போதைய ஆட்சியில் ஒருவேளை உணவை உண் பதற்குக்கூட மக்கள் சிரமப்படுகின்றனர்.

எமது ஆட்சிக் காலத்தில் அரசை சமூக வலைத்தளங்களில் விமர்சிக்க வாய்ப்பளிக்கப்பட்டது. இன்று அந்த வாய்ப்பும் இல்லை.

அரசுக்கு எதிராக சமூக வலைத்தளங்களில் கருத்துக்களை வெளியிடும் இளைஞர்கள் குற்ற விசாரணைப் பிரிவுக்கு அழைக்கப்படுகின்றனர்.

அவ்வாறில்லை என்றால் குறித்த சமூக வலைத்தள கணக்குகள் முடக்கப்படுகின்றன. பொலிஸார் ஊடாக மக்களின் கருத்துச் சுதந்திரம் முடக்கப்படுகிறது.

அரசின் முட்டாள்தனமான செயற்பாடுகளால் பொது மக்களே பாதிக்கப்பட்டுள்ளனர்.

பெருந்தெருக்களை அபிவிருத்தி செய்வதற்குப் பெருமளவில் நிதியை ஒதுக்கும் இந்த அரசு தேவையான இடங்களில் பாலங்களை நிர்மாணித்துக் கொடுப்பதில்லை.

இதன் காரணமாகவே கிண்ணியாவில் அந்த அசம்பாவிதம் ஏற்பட்டது.

சமையல் எரிவாயு சிலிண்டர்களை வீடுகளில் வைத்திருப்பவர்கள் வெடிகுண்டை வீட்டில் வைத்திருப்பதைப் போல் அச்சத்துடனேயே இருக்கின்றனர்.

நாட்டில் பாரிய டொலர் தட்டுப்பாடு நிலவுகிறது. சர்வதேச ஒத்துழைப்புகள் பூச்சியமான நிலையில் உள்ளன.

இலங்கையின் நிலையற்ற செயற்பாடுகளால் சீனாவும் சினம் கொண்டுள்ளது.

மறுபுறம் இந்தியா மற்றும் ஐரோப்பிய நாடுகளும் இலங்கை மீது சினம் கொண்டுள்ளன.

இவ்வாறான நாட்டை எவ்வாறு ஆட்சி செய்ய முடியும்? என அவர் கேள்வி எழுப்பினார். (நி)

# வீடுகளில் பராமரிக்கப்படும் தொற்றாளர் எண்ணிக்கை திடீர் அதிகரிப்பு

(கொழும்பு)

கொரோனாத் தொற்றுக்குள்ளாகிப் பாதிக்கப்பட்டு வீடுகளில் சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளின் எண்ணிக்கை மீண்டும் அதிகரித்து வருவதாக சுகாதார அமைச்சின் ஒருங்கிணைந்த கொவிட் தொற்றாளர் வீட்டுப் பராமரிப்பு திட்டத்தின் தலைவர் விசேட மருத்துவ நிபுணர் மல்காந்தி கல்ஹேன தெரி வித்தார்.

அறிகுறியற்ற மற்றும் இலேசான அறிகுறிகளைக் கொண்ட கொவிட்-19 நோயாளிகளை வீடுகளில் வைத்துப் பராமரிக்கும் செயற்றிட்டத்தின் கீழ் சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை கடந்த 3 வாரங்களாக அதிகரித்துள்ளதாகவும் தற்போது இந்தத் திட்டத்தின் கீழ் 4 ஆயிரத்து 295 கொவிட் நோயாளிகள் வீடுகளில் வைத்து கண்காணிக்கப்பட்டு வருகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மீண்டும் தொற்றாளர்கள் நாட்டில் அதிகரித்து வரும் நிலையில் முகக் கவசங்களை அணிதல், கைகளை அடிக்கடி கழுவுதல் மற்றும் சமூக இடைவெளி பேணுதல் போன்ற அடிப்படை சுகாதார வழிகாட்டுதல்களை கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

அத்துடன் கொவிட் தொற்று நோயில் இருந்து பாதுகாப்பு பெற கொவிட் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ளுமாறும் அவர் அறிவுறுத்தினார். (நி)

# எரிவாயு வெடிப்பு தொடர்பான விசாரணையை ஆரம்பித்தது மனித உரிமைகள் ஆணைக்குழு

(கொழும்பு)

எரிவாயு வெடிப்புச் சம்பவங் கள் நாளாந்தம் பதிவாகி வரும் நிலையில், அரச நிறுவனங்கள் கவனக் குறைவாக செயற்படுகின்றமை தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு நேற்று விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் அழைப்பிற்கிணங்க, இலங்கை தர நிர்ணய சபை, நுகர்வோர் விவகார அதிகார சபை மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் பிரதிநிதிகள் விசாரணைகளுக்கு தேவையான தகவல்களை வழங்கினர்.

இலங்கை இளம் ஊடகவியலாளர் சங்கம் உள்ளிட்ட சமூக செயற்பாட்டாளர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முன்வைத்த முறைப்பாடுகளுக்கு அமைவாக இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (நி)

**FACULTY OF SCIENCE UNIVERSITY OF JAFFNA**

**Registration for General/ Honours Degree Examinations, Level 1,2,3,4 in Science-2020 (First Semester)**

The above End of Course Examinations are scheduled to be held in January 2022. The Examination Timetable will be made available in the faculty website http://www.sci.jfn.ac.lk/index.php/end-of-course-timetables/.

All candidates (Proper & Repeat) of the Faculty of Science are requested to register for the above examination on or before 17/12/ 2021 by filling the online form which is available in the faculty website.

(C-3210) **Registrar**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
26 . 09 . 1951



மறைவு
09 . 12 . 2021

## திருமதி சிவபாக்கியம் பாக்கியநாதன்

சித்தன்மாவடி வீதி கல்வயல் சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவபாக்கியம் பாக்கியநாதன் நேற்று (09.12.2021) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி கந்தையா - தங்கம்மா தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற திரு. திருமதி நவரத்தினம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் பாக்கிய நாதனின் (ஓய்வுபெற்ற சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் (விஞ்ஞானம்) -தென்மராட்சி) பாசமிகு மனைவியும் சசீவன் (ஆசிரியர் -யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி), ரஜீவன் (London) ஆகியோரின் அன்புத் தாயாரும் துவாரகா (ஆசிரியை - யா/ சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி), வாணிஸ்ரீ (ஆசிரியை- யா/மண்டைதீவு றோமன் கத்தோலிக்க பாடசாலை) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் பகலவனின் பாசமிகு அப்பம்மாவும் காலஞ்சென்ற குமாரசாமி, முருகையா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (10.12.2021) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு
021 205 7822 (C-3213)

தகவல்:
குடும்பத்தினர்

# பிரிஸ்பேன் டெஸ்ட்

## வோர்னர், ஹெட் அபாரம் வலுவான நிலையில் ஆஸி



ஆஷஸ் டெஸ்ட் கிரிக்கெட் தொடரின், முதல் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்துள்ளது.

இதன்படி முதல் இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத் தாடி வரும் அவுஸ்திரேலியக் கிரிக்கெட் அணி, நேற்றைய இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவில், 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 343 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

நேற்று முன்தினம் பிரிஸ்பேன் மைதானத்தில் ஆரம்பமான இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத் தாடிய இங்கிலாந்து கிரிக்கெட் அணி, முதல் இன் னிங்ஸிற்காக 147 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இதனைத்தொடர்ந்து பதிலுக்கு முதல் இன்னிங்சை தொடங்கிய அவுஸ்திரேலியா அணி, நேற்றைய ஆட்டநேர முடிவில் 7 விக் கெட்டுகள் இழப்புக்கு 343 ஓட்டங்களைப் பெற்றது.

அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணி சார்பில், டேவிட் வோர்னர் 94, மார்னஸ் லபுஸ் சேகன் 74, ட்ராவிஸ் ஹெட் 112 ஓட்டங்களையும் அதிக பட்சமாக பெற்றுக்கொண்டனர்.

இங்கிலாந்துக் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், ஒல்லி றொபின்சன் 3 விக்கெட்டுகளையும் கிறிஸ்வோக்ஸ், மார்க்வுட், ஜெக்லீச் மற்றும் ஜோரூட் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.


இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முதல் இன்னிங்ஸ் ஓட்டங்களுடன் ஒப்பிடுகையில், அவுஸ்திரேலியா அணி 196 ஓட்டங்கள் முன்னிலையில் உள்ளது.

இன்னமும் 3 விக்கெட்டுகள் வசமுள்ள நிலையில், போட்டியின் மூன்றாவது நாளுக்காக அவுஸ்திரேலியா அணி இன்று துடுப்பெடுத் தாடவுள்ளது. (6)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2465

### கனிஸ்கர்

என்ன தூக்கம் வரலையா? நான் வேனா பாட்டுப் பாடி தூங்க வைக்கவா..?



சொய்ங்ங்... கொய்ய்ங்ங்...
கீகீகீ... கீகீகீ...

### விஷயா



சும்மாவே நாய் தூக்கிட்டு போவும்
இதுல மீன் மொடல் வேற

### பார்த்தீபன்



இரண்டு பேரும் இங்க வாங்க
அம்மா அடிக்க மாட்டேன்



நாங்களும் அடிக்கமாட்டாங்கன்னு
நம்பி கிட்ட போனோம். அப்புறம் தான்
தெரிஞ்சிது பின்னாடி குச்சி வச்சிருந்தாங்கன்னு.!

### பிரதீபா



ஐயோ நைட் புள்ளா சார்ஜ்
போட்டு 1% கூட ஏறலையே....



மூதேவி சார்ஜ் போட்டியே சுவிட்ச் போட்டியா..?

### சந்திரன்

ஒமிக்ரோன் வைரஸ் வருதுன்னு கவலைப்பட வேண்டாம்
வெற்றிலை நிறைய சாப்பிட்டால் பக்கத்துல கூட வராதாம்
இப்படி என்று புதுசா எனி கிளம்பிடுவாங்க...!



நம்மளும் எதையாவது அள்ளி போடுவோம்

### அஜந்தன்



எங்ககிட்ட தான் உலகத்துல உள்ள எல்லா
bomb உம் இருக்கு



உங்ககிட்ட காஸ் சிலிண்டர் இருக்கா?

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இராசிபலன்

10.12.2021
கார்த்திகை 24, வெள்ளிக்கிழமை
சப்தமி பின்னிரவு 1.27 மணிவரை
சதயம் பின்னிரவு 3.57 மணிவரை
சுபநேரம் 6.19- 7.49 மணிவரை
இராகுகாலம் 10.49-12.19 மணிவரை
சந்திராஷ்டமம்: பூசம்

வளவன்


மேஷம்

ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், காரிய அனுகூலமுண்டு.


ரிஷபம்

அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத் தோன்றும், சுப நகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.


மிதுனம்

தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பகை விலகி பாசம் கூடும் நாள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, வழிபாட்டால் மகத்துவம் காணும் நாள்.


கடகம்

நேசித்த ஒருவருடன் யோசித்துப் பேசும் சூழ்நிலை ஏற்படலாம், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், எடுத்த காரியங்களில் சில தடைகள் ஏற்படலாம்.


சிம்மம்

தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், உறவினர் வருகையால் உள்ளம் மகிழும் சம்பவங்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


கன்னி

வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், செய்தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.


துலாம்

வளர்ச்சி கூடும் நாள், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம், வங்கிச் சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும்.


விருச்சிகம்

விலையுயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், நண்பர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.


தனுசு

நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பாகப்பிரிவினைகள் சுமுகமாக அமையும்.


மகரம்

பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், பொதுவாழ்வில் புகழ் கூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம்.


கும்பம்

சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், விரயங்கள் மேலோங்கும் நாள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும், விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபடவேண்டிய நாள்.


மீனம்

உறவினர்களின் அன்புத் தொல்லைக்கு ஆளாகலாம், சுப விரயங்கள் கூடும் நாள், காரிய அலைச்சல்கள் அதிகரிக்கலாம், சயன சுகக் குறைவான நாள்.

நீ விரும்பாத எதுவும் உன்னோடு இல்லாமல் பார்த்துக்கொள்

## தொழிற்சங்க நடவடிக்கை; தயாராகும் புகையிரத பொறுப்பதிகாரிகள் சங்கம்

(கொழும்பு)

புகையிரத நிலையப் பொறுப்பதிகாரிகள் சங்கத்தினர் எதிர்கொள்ளும் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக் கொடுக்கக் கோரி எதிர்வரும் நாட்களில் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட நிறைவேற்றுக் குழு ஏக மனதாக தீர்மானித்துள்ளது என புகையிரத நிலையப் பொறுப்பதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் கசுன் சாமர தெரிவித்தார். (நி)


## திருத்தம்

கேள்வி அறிவித்தல்
வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்
சபை நிதி வேலைத் திட்டம் 2021- கட்டம் IV

07.12.2021ம் திகதி பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தல் விளம்பரத்தில் பின்வரும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

1. இல 8 சுன்னாகம் நூலகத் திருத்த வேலை மதிப்பீட்டுத் தொகை (Mn) 1.136 ஆகவும், கேள்விப் பிணை தொகை ரூ.12,000.00 ஆகவும் மாற்றப்படுகின்றது.
2. இல.10 சுன்னாகம் உப அலுவலகம், மீன் சந்தை, மரக்கறிச்சந்தை மலசலகூடத் திருத்த வேலை மதிப்பீட்டுத் தொகை (Mn) 2.036 ஆகவும், கேள்விப் பிணை தொகை ரூ.21,000.00 ஆகவும் மாற்றப்படுகின்து.

க.தர்ஷன்
தவிசாளர், பிரதேசசபை பெறுகைக்குழு,
வலிகாமம் தெற்கு பிரதேச சபை.
சுன்னாகம்.
10.12.2021 (C-3207)



## சிறுவர் பூங்கா முன்பள்ளி குழந்தைகள் காப்பக வளாகம்
## இல.528, பலாலி வீதி, திருநெல்வேலி

2021ம் ஆண்டிற்கான புதிய மாணவர்களைப் பதிவு செய்தலும் முன்பள்ளி கல்வி தொடர்பாகப் பெற்றோர்களுக்கான விழிப்புணர்வு நூல் விநியோகம்-14.12.2021 காலை 9.00 மணி

**2+ Play Group, 3+ Montessori, 4+ Pre School**

- சிறுவர்களுக்கு உகந்த மிகப் பாதுகாப்பான சூழலில் சுதந்திரத்துடன் கூடிய மகிழ்ச்சிகரமான விளையாட்டுவழி கற்றலும் குழந்தைகள் காப்பக சேவையும் (7.30-4.30)






" களிமண் பிசைவிலிருந்து கணனிக் கற்கை வரை பயிற்சி பெற்ற ஆசிரிய அம்மாக்களின் அரவணைப்பு, அர்ப்பணிப்பு"

- ஆடல், பாடல், விளையாட்டு, கற்றல் வட்டங்கள், மணல் நீருடன் விளையாட்டு, தசைநார் பயிற்சிகள், மொழித்தேர்ச்சி என்பவற்றினூடு ஆரம்பக் கல்விப் பாடசாலைக்குச் செல்வதற்கான அனைத்துத் தேர்ச்சிகளும் சர்வதேச தர அடிப்படையில் வழங்கப்படுகின்றன.

கலாநிதி பா. தனபாலன்
(நிபுணத்துவ ஆலோசகர்)
Pre School Education Specialist)
M.Phil in Pre School Education
PhD Pre School & Primary Education
(University Of Jaffna)

திருமதி. கர்ணி தனபாலன்
(பணிப்பாளர்)
Dip in Pre School Education (Distinction)
Dip in Guidance & Counselling (1st Class)

T.P: 076 848 5213

" கல்வியால் உயர்வோம் காலத்தை வெல்வோம்"

"சிறுவர் பராமரிப்பு முன்பள்ளி சான்றிதழ் பயிற்சி" பெறவிரும்பும் பயிற்சி ஆசிரியர், பெற்றோர், சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை Director, Kids Park Pre School & Day Care Campus 528, Palaly Road, Thirunelvey என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும். உள்ளகப் பயிற்சியுடன் பயில்வுகள் விரைவில் ஆரம்பமாகவுள்ளன.

(8988)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தூய நகரம் தூய கரங்கள் திட்டத்தின் கீழ்

# நாயன்மார்க்கட்டுக் குளம் புனரமைப்பு ஆரம்பம்



(குப்பிழான்)

யாழ்.மாநகர முதல்வரின் "தூய நகரம் தூய கரங்கள்" திட்டத்தின் தொடர்ச்சியாக யாழ்.மாநகரசபைக்குட்பட்ட நாயன்மார்க்கட்டுக் குளம் துரித அபிவிருத்தித் திட்டப் பணிகள் நேற்று வியாழக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டன.

யாழ்.மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் தலைமையில் துரித அபிவிருத்தித்திட்டப் பணிகளுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு காலை 9 மணியளவில் இடம்பெற்றது.

சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் யாழ்ப்பாணம் நல்லூரை இராசதானியாகக் கொண்டு ஆட்சி புரிந்த தமிழ் மன்னனாகிய சிங்கை ஆரியச் சக்கரவர்த்தியினால் அமைக்கப்பட்ட வரலாற்றுப் பாரம்பரியம் மிக்க மேற்படி குள அபிவிருத்தித் திட்டப் பணிகளுக்கு மோட் குழுமத்தின் நிறுவுநரும், இளம் தொழிலதிபருமான அருந்தவநாதன் அனோசன் முழுமையான நிதிப்பங்களிப்பை வழங்கியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (5-18-33-104)

# மோ.சைக்கிள்-ஆட்டோ விபத்து ஒருவர் வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - சிவலிங்கப்புளியடி சந்தியில் இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவன் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்.பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட காங்கேசன்துறை வீதி சிவலிங்கப்புளியடி சந்தியில் மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கரவண்டி என்பன மோதியதில் இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த கிளிநொச்சியை சேர்ந்த இளைஞன் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாண போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் முச்சக்கர வண்டி சாரதி கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த விபத்தின் போது அருகில் இருந்த வர்த்தக நிலையங்கள் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (5-6-33-104)

# வல்வெட்டி. நகரசபை தவிசாளர் தெரிவு

(கரணவாய்)

வல்வெட்டித் துறை நகர சபைக்கான புதிய தலைவர் தெரிவு எதிர்வரும் 15 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறும் என வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பட்றிக் ரஞ்சன் அறிவித்துள்ளார்.

இச்சபையின் வரவு-செலவு திட்டம் கடந்த மாதம் இரு முறை சமர்ப்பிக்கப்பட்டபோது, இரு முறையும் தோற்கடிக்கப்பட்டது.

அதனையடுத்தே சபைக்கான புதிய தலைவர் தெரிவு செய்யப்படவுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகையில் இருந்த இச்சபை, சில மாதங்களுக்கு முன்னர் சுயேட்சைக் குழுவின்ஆளுகைக்கு மாறியிருந்தமை குறிப்பிடத்தக்கது .(5-6)



புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை சித்திவிநாயகர் ஆலய வருடாந்தப் பெருங்கதை விரத உற்சவத்தின் கஜமுகசங்காரம் நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் இடம்பெற்றது. (படம்:- செ.ரவீந்திரன்)

## திருவெம்பாவை நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ண காம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய கண்ணகியம்மன் ஆலயங்களின் திருவெம்பாவை உற்சவம் நாளை 11 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் இடம்பெறும்.

இறுதிநாளான எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலை 4 மணிக்கு நடேசர் அபிசேக ஆருத்திரா தரிசன நிகழ்வு இடம்பெற்று தொடர்ந்து சுவாமி உள்வீதி வலம் வந்து ஆலய பித்தர் கேணியில் தீர்த்த உற்சவம் இடம்பெறும். (5)

## இரத்ததான முகாம்

(குப்பிழான்)

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் முன்னாள் பொது வைத்திய நிபுணர் மருத்துவர் அம்பலவாணர் ரகுபதியின் மூன்றாம் ஆண்டு நினைவாக இணுவில் இளைஞர்களின் ஏற்பாட்டில் டாக்டர் ரகுபதி அறக்கட்டளையின் அனுசரணையில் இரத்ததான முகாம் நாளை 11 ஆம் திகதி சனிக்கிழமை காலை 08.30 மணி முதல் இணுவில் அறிவாலயத்தில் இடம் பெறவுள்ளது.

மேற்படி இரத்ததான முகாம் நிகழ்வில் அனைத்துக் குருதிக் கொடையாளர்களையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (5-6-18)

## பேராசிரியர் கைலாசபதியின் நினைவுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பேராசிரியர் க.கைலாசபதியின் 39 ஆவது ஆண்டு நினைவுக் கூட்டம் நாளை மறுதினம் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் கொக்குவில் தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது. ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் [illegible] தலைமையில் [illegible] இடம்பெறவுள்ளது. (5-6-18)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் முதல் முறையாக தமிழ்மொழிக்கற்பித்தலில் சிறப்புக்கலைமாணி பட்டக்கற்கை நெறிக்கான 2022/2023 ஆம் கல்வியாண்டிற்குரிய விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரர்கள் www.ou.ac.lk என்னும் இணையத்தள முகவரியில் பிரவேசித்து 10.01.2022 வரை விண்ணப்பிக்க முடியும்.

மேலதிக விபரங்களிற்கு யாழ்ப்பாணப் பிராந்திய நிலையம் பிறவுண் வீதி கொக்குவில் எனும் முகவரியூடாகவும் மற்றும் 021-222 3374 தொலைபேசியூடாகவும் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்க முடியும் என யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய் உதவிப்பணிப்பாளர் கே.கந்தவேள் அறிவித்துள்ளார். (5)

• • • • • • • • • • • • • • • • • • • • • • • •

(யாழ்ப்பாணம்)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வருடந்தோறும் வழங்கப்படுகின்ற கலாபூஷண விருதுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இதற்காக நாடகம்,இலக்கியம், நடனம், ஓவியம், சிற்பம் ,இசை, கிராமியக்கலை,திரைப்படக் கலை,தற்காப்புக்கலை மற்றும் ஏனைய கலைத்துறைகளில் சிறந்த சேவையாற்றிய அறுபது வயதிற்கு மேற்பட்ட கலைஞர்கள் விண்ணப்பிக்க முடியும்.

எனவே தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த கலைஞர்கள் பிரதேச செயலக கலாசாரப்பிரிவில் விண்ணப்பப்படிவத்தைப் பெற்று பூர்த்தி செய்து எதிர்வரும் 13 ஆம் திகதிக்கு முன்னர் கலாசாரப் பிரிவில் ஒப்படைக்குமாறு தெல்லிப்பழை பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (5)

• • • • • • • • • • • • • • • • • • • • • • • •

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் 2021 ஆம் ஆண்டிற்கான கலாபூஷண விருதுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதில் கலைக்கு விசேட சேவையாற்றி 60 வயதைப் பூர்த்தி செய்த நல்லூர் பிரதேச செயலக பிரிவில் நிரந்தரமாக வசிக்கும் கலைஞர்கள் விருதுக்கான தங்களுடைய சுய விபரக் கோவையுடன் கலை சார்பாக தங்களிடம் உள்ள ஆவணங்களின் மூலப்பிரதிகளை 2021.12.13 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலக கலாசார பிரிவில் சமர்ப்பிக்குமாறு நல்லூர் பிரதேச செயலாளர் திருமதி.எ.அன்ரன் யோகநாயகம் அறிவித்துள்ளார். (5)


# துவிச்சக்கர வண்டிகளுக்கு ஸ்ரிக்கர் ஒட்டும் பொலிஸார்

(யாழ்ப்பாணம்)

வீதி விபத்துக்களை குறைப்பதற்காக "உங்களின் பாதுகாப்பிற்காக நாம்" எனும் கருப்பொருளில் துவிச்சக்கர வண்டிகளில் இந்த ஸ்டிக்கர்களை ஒட்டும் நடவடிக்கை யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பல இடங்களில் நடைபெற்று வருகிறது.

அந்த வகையில் யாழ். பிரதம தபால் அலுவலகத்திற்கு முன்பாக துவிச்சக்கர வண்டிகளுக்கு ஸ்ரிக்கர் ஒட்டு பணிகளை பொலிஸார் முன்னெடுத்தனர்.

யாழ்ப்பாணம் போக்குவரத்துப்பிரிவு பொலிஸ் பரிசோதகர் மஞ்சுல டி சில்வா, உப பொலிஸ் பரிசோதகர் பிரியந்த அபேயரத்ன, யாழ். பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவு பொறுப்பதிகாரி விதான பத்திரன, ஆகியோர் கலந்து கொண்டனர். (5-33)



கைதடி கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட 27 விவசாயிகளுக்கு நேற்று முன்தினம் புதன்கிழமை மின் மோட்டர்கள் (நீர் இறைக்கும் இயந்திரங்கள்) வழங்கி வைக்கப்பட்டன. வேர்ல்ட் விஷன் நிறுவனத்தின் அனுசரணையுடன் கொள்வனவு செய்யப்பட்ட மின் மோடடர்களை பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராம நாதனின் பிரத்தியேக செயலாளர் சதாசிவம் இராமநாதன் பயனாளிகளிடம் வழங்கி வைத்தார். குறித்த நிகழ்வில் கைதடி கமநல சேவை திணைக்களத்தின் பெரும்பாக உத்தியோகத்தர் வாகீசன், மற்றும் பலர் கலந்து கொண்டனர். (படம்:-சுபேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளில் அதிகரிக்கும் கொரோனா கொத்தணிகள்

(கொழும்பு)

**பாடசாலைகளுக்குள்ளும் கொரோனா கொத்தணிகள் உருவாக ஆரம்பித்துள்ளன. இந்த நிலைமை ஆரம்பத்திலேயே கட்டுப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறில்லையெனில் மீண்டும் பாடசாலைகளை மூட வேண்டிய நிலைமை ஏற்படும் என்பதை சகலரும் நினைவில் கொள்ள வேண்டும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

"பாடசாலை கட்டமைப்புக்குள் நிர்வாகப் பிரிவினர் மற்றும் மாணவர்கள் மத்தியில் பெரும்பாலானோர் கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்படுகின்றனர்.

இதனால் சில இடங்களில் கொரோனா கொத்தணிகளும் பதிவாகியுள்ளன.

இவ்வாறு அதிகரித்துவரும் கொரோனா தொற்று பரவலைக் கட்டுப்படுத்த வேண்டிய முழுப் பொறுப்பும் பாடசாலை நிர்வாகப் பிரிவினருடையதாகும்.

அதேபோன்று மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் இந்தப் பொறுப்பு காணப்படுகிறது.

சுகாதார விதிமுறைகள் அனைத்தையும் முறையாகப் பின்பற்றுமாறு பெற்றோர் தமது பிள்ளைகளை தொடர்ந்தும் அறிவுறுத்த வேண்டும்.

குறிப்பாக பாடசாலைகளுக்குள் சுகாதார விதிமுறைகளை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மீற வேண்டாம் என்று அறிவுறுத்துவது அத்தியாவசியமானதாகும் எனப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கத் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார். (நி)



2020 ஆம் ஆண்டுக்கான ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை உறுப்பினர்களின் பிள்ளைகள் 9000 பேருக்கு புலமைப்பரிசில் வழங்கும் திட்டத்தின் முதலாம் கட்ட காசோலை வழங்கும் நிகழ்வு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று வியாழக்கிழமை அலரி மாளிகையில் இடம்பெற்றது.

## சீஸ் கட்டிக்குள் புழுக்கள்



(கொழும்பு)

நிட்டம்புவ பிரதேசத்தில் ஒருவர் கொள்வனவு செய்த சீஸ் கட்டிகளை வீட்டிற்கு கொண்டு சென்று திறந்து பார்க்கும் போது அந்த சீஸ் கட்டிக்குள் இரண்டு புழுக்கள் இருந்துள்ளன.

அதனை பரிசோதித்து பார்த்த போது இது காலாவதியான சீஸ் என கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக கொள்வனவு செய்தவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனால் சீஸ் கொள்வனவு செய்பவர்கள் அவதானமாக இருக்குமாறு அவர் தெரிவித்தார். (நி)

## மீண்டும் சர்ச்சையில் சிக்கியுள்ள லிற்றோ சமையல் எரிவாயு

(கொழும்பு)

லிற்றோ காஸ் நிறுவனத்தினர் மக்களை ஏமாற்றும் வகையில் செயற்படுவதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. பொகவந்தலாவ பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் நேற்றுக் காலை கொள்வனவு செய்த சிலிண்டரினால் சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

குறித்த சிலிண்டரில் சிவப்பு லேபிள் ஒட்டப்பட்ட நிலையில் வீட்டுக்கு எடுத்துச் சென்றுள்ளார். எனினும் அந்த லேபிளை அகற்றியபோது, சிவப்பு லேபிளுடன் பின்னால் பழைய வெள்ளை லேபிள் சுற்றி இருந்துள்ளது.

இந்நிலையில் லிற்றோ காஸ் நிறுவனம் வாடிக்கையாளர்களை தவறாக வழிநடத்தும் முயற்சியாக பழைய எரிவாயு சிலிண்டரில் வெள்ளை லேபிளின் மேல் நிறுவனம் சிவப்பு லேபிளை ஒட்டியுள்ளதாக அந்தப் பெண் குற்றம் சாட்டியுள்ளார்.

அண்மைக்காலமாக இலங்கையின் பல பகுதிகளில் லிற்றோ காஸ் சிலிண்டர் வெடிக்கும் சம்பவங்கள் அதிகரித்துள்ளமையைத் தொடர்ந்து, சீர்செய்யப்பட்ட புதிய சிலிண்டர்கள் சந்தைக்கு விடப்பட்டுள்ளதாக லிற்றோ காஸ் நிறுவனம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# கேள்வி அறிவித்தல்

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி, வடக்கு மாகாணம்

1. தலைவர், பிராந்திய பெறுகைக்குழு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி அவர்கள் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்கும், அதன் பிரிவுக்குட்பட்ட வைத்தியசாலைகளுக்கும் 2022 ஆம் ஆண்டிற்கான நிழல் பிரதி எடுக்கும் இயந்திரங்கள் **(Photo Copiers)** மற்றும் குளிரூட்டிகள் **(Air Conditioners)** பராமரிப்பு மற்றும் சுத்திகரிப்பு சேவைக்கு இப்போது தகவுடையோரும் தகைமை பெற்றவருமான கேள்வியாளர்களிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக் கேள்விகளைக் கோருகின்றார்.

| விடயம் | குறியீட்டு இலக்கம் | இயந்திரங்களின் எண்ணிக்கை | ஒப்பந்த காலம் | மீளளிக்கப் படாத வைப்புத் தொகை (ரூபா) | மீளளிக்கப்படும் வைப்புத் தொகை (ரூபா) | மீளளிக்கப் படும் வைப்புத் தொகைக்கான காலம் |
|---|---|---|---|---|---|---|
| நிழல் பிரதி எடுக்கும் இயந்திரங்களின் பராமரிப்பு மற்றும் சுத்திகரிப்புச் சேவை | NP/45/04/02/PC/2021/ 01 | 24 | ஒரு வருடம் | 2,500.00 | 25,000.00 | 25.02.2022 |
| குளிரூட்டிகளின் பராமரிப்பு மற்றும் சுத்திகரிப்பு சேவை | NP/45/04/02/AC/2021/ 01 | 73 | ஒரு வருடம் | 2,500.00 | 50,000.00 | 25.02.2022 |

2. விலைக்கேள்வியானது தேசிய போட்டிக் கேள்வியின் (NCB) மூலம் நடாத்தப்படும்.
3. விலைக்கேள்விதாரர்கள் உரிய வகையிலான வியாபாரப் பதிவுடையவராகவும், கறுப்புப் பட்டியலில் பெயர் இடம்பெறாதவராயிருத்தலும் வேண்டும்.
4. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் கேள்வி ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
5. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்கள் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, ஏ-9 வீதி, கிளிநொச்சி (தொலைபேசி இல.021 228 5932/ 021 222 5719) அவர்களிடமிருந்து மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன், இம்முகவரியில் காலை 9.00 மணியிலிருந்து பிற்பகல் 15.00 மணிவரை கேள்வி ஆவணங்களைப் பரிசோதனை செய்யலாம்.
6. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்களினால் ஆங்கிலமொழியிலான கேள்வி ஆவணங்களில் பூரணமான தொகுதியொன்றை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, A9 வீதி, கிளிநொச்சி எனும் முகவரியில் எழுத்துமூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 10.12.2021 ஆம் திகதி முதல் 23.12.2021 ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 15.00 மணிவரையான காலப்பகுதியில் மேலே அட்டவணையில் கூறப்பட்டுள்ள மீளளிக்கப்படாத தொகையினைக் கட்டணமாகச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.
7. கேள்விகள் 24.12.2021 ஆம் திகதியன்று முற்பகல் 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தலைவர், பிராந்திய கேள்விச்சபை, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, A9 வீதி, கிளிநொச்சி எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் குறியீட்டு இலக்கத்தினை தபால் உறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். நேரடியாகக் கீழேயுள்ள முகவரியில் வருகை தர விரும்பும் கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது சமூகத்தில் முடிவுறுத்தல் காலத்தின் பின் உடனடியாகக் கேள்விகள் திறக்கப்படும்.
8. மேலே அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு கேள்விப் பிணைப்பணம் **(Bid Security)** செலுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
9. 01/10/2021 ஆம் திகதிக்குப் பின் அந்தந்தப் பிரதேச செயலாளர்களிடம் இருந்து பெறப்பட்ட தமது சொத்துக்களின் பெறுமதியை உறுதிப்படுத்தும் சான்றுக்கடிதமும் அத்துடன் வங்கி உத்தரவாதக் கடிதம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
10. ஏற்கனவே சேவையினை வழங்கி வரும் ஒப்பந்தகாரர்கள் எதிர்வரும் காலங்களுக்கு புதியவர்களாகவே கருதி தீர்மானம் எடுக்கப்படும்.
11. இவ்விலை மனுக்கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலுமோ இப்பூரண நடவடிக்கையிலிருந்து எவருக்கும் நட்ட ஈடு எதுவும் செலுத்தாமலேயே இவ் விலை மனுக்கோரலை இரத்துச் செய்வதற்கு பெறுகைக்குழு தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக்குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,**
**கிளிநொச்சி.**

(C-3206)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவீரர் நெப்போலியனின் போர் வாள் 2.8 மில்லியன் அமெரிக்க டொலருக்கு ஏலம்

(வோஷிங்டன்)

நெப்போலியனின் வாள் உட்பட ஆயுதங்கள் 2.8 மில்லியன் அமெரிக்க டொலருக்கு ஏலம் எடுக்கப்பட்டது.

1799 ஆம் ஆண்டு மாவீரர் நெப்போலியன் ஆட்சிக் கவிழ்ப்பை நிகழ்த்தியபோது எடுத்துச் சென்ற ஆடை, வாள் மற்றும் 5 ஆயுதங்கள் அமெரிக்காவில் ஏலம் விடப்பட்டன.

இந்த ஏலத்தில் நெப்போலியனின் வாள் உள்பட ஆயுதங்கள் 2.8 மில்லியன் அமெரிக்க டொலருக்கு ஏலம் எடுக்கப்பட்டது.

நெப்போலியனின் இந்த ஆயுதங்கள் அரசு ஆயுத தொழிற்சாலையில் இயக்குனராக இருந்த நிக்கோலஸ் நோயல் பவுடெட் என்பவரால் தயாரிக்கப்பட்டது.

பேரரசராக முடிசூட்டப்பட்ட பிறகு நெப்போலியன் அந்த வாளை ஜெனரல் ஜீன் ஆண்டோச் ஜூனோட்டிடம் ஒப்படைத்ததாக நம்பப்படுகிறது.

ஆனால்ஜெனரல்மனைவி தனது கடனை அடைப்பதற்காக வாளை விற்றுள்ளார் என்று ஏல நிறுவனம் தெரிவித்தது. (நி)

# ஒமிக்ரோன் திரிபிலிருந்து பாதுகாக்கும் பூஸ்டர்


(வோஷிங்டன்)

பூஸ்டர் தடுப்பூசிகள் ஒமிக்ரோன் மாறுபாட்டிற்கு எதிராக வலுவான பாதுகாப்பை வழங்குவதாக பைசர் நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஆய்வக ஆய்வுகளின் தரவுகளின்படி, புதிய மாறுபாடு முந்தைய விகாரங்களைக் காட்டிலும் ஏற்கனவே உள்ள தடுப்பூசிகளால் வழங்கப்பட்ட நோயெதிர்ப்பு பாதுகாப்பைத் தவிர்ப்பதில் மிகவும் திறமையானது என்பதை உறுதிப்படுத்துகினறது என சுகாதார நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

அதே நேரத்தில் ஆரம்ப இரண்டு டோஸ் தடுப்பூசிகள் தொற்றுநோயைத் தடுக்க போதுமானதாக இருக்காது எனவும் அந்நிறுவனம் தெரிவித்துள்ளது. (நி)

# பாம்பிற்கு பயந்து வீட்டை கொளுத்திய அமெரிக்கர்



(வோஷிங்டன்)

மூட்டைப் பூச்சிக்கு பயந்து வீட்டைக் கொளுத்துவதா? என்கிற பழமொழியை பலரும் கேட்டிருப்போம். ஆனால், பாம்புக்கு பயந்து ஒருவர் தனது வீட்டையே கொளுத்திய சம்பவம் நடந்துள்ளது.

அமெரிக்காவின் மேரிலாண்ட் மாகாணத்தை சேர்ந்த தொழிலதிபர் ஒருவருக்கு 10,000 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்ட ஆடம்பர சொகுசு வீட்டிற்கு பாம்புகள் அடிக்கடி அழையா விருந்தாளியாய் வந்து செல்வது வழக்கமாக இருந்துள்ளது.

1.8 மில்லியன் டொலர்கள் மதிப்புள்ள அந்த வீட்டினுள் சம்பவத்தன்று நுழைந்த பாம்பினை விரட்டியடிக்க யோசித்த தொழிலதிபர் நிலக்கரி மூலம் புகையை ஏற்படுத்தி பாம்பை விரட்ட முடிவு செய்தார்.

இதன்போது, எதிர்பாராத விதமாக வீட்டில் தீப்பிடித்தது. கண் இமைக்கும் நேரத்தில் தீ மளமளவென பரவியதால் ஒட்டு மொத்த வீடும் கொழுந்து விட்டு எரிந்தது.

சில நிமிடங்களிலேயே அந்த ஆடம்பர வீடு இருந்த இடம் தெரியாத அளவி ற்கு சாம்பலாகிப்போனது. இது தொடர்பான புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வைரலாக பரவி வருகின்றன. (நி)

# பிபின் ராவத் மறைவுக்கு பாகிஸ்தான் உட்பட உலகத் தலைவர்கள் இரங்கல்



(டில்லி)

முப்படைகளின் தலைமை தளபதி பிபின் ராவத்தின் மறைவுக்கு பாகிஸ்தான் இராணுவ உயர் அதிகாரிகள் இரங்கல் தெரிவித்தனர்.

இதன்படி பாகிஸ்தான் இராணு செய்தி தொடர்பாளர் மேஜர் ஜெனரல் பாபர் இப்திகர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்திய இராணுவ முப்படைகளின் தலைமை தளபதி பிபின் ராவத், அவரது மனைவி மற்றும் 13 வீரர்கள் அகால மரணம் அடைந்தது அதிர்ச்சி அளிக்கிறது. அவர்களை இழந்து வாடும் குடும் பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்தியாவுக்கான ரஷ்ய தூதர் நிகோ லெய் குதாசேவ், இந்தியா-ரஷ்யா இடையேயான சிறப்பான உறவுகளை மேம்படுத்துவதில் முக்கிய பங்காற்றிய ஒரு நெருங்கிய நண்பரை ரஷ்யா இழந்துவிட்டது. இந்த சோகமான நிகழ்வில் இந் தியாவுடன் இணைகிறோம்' என்று தெரிவித்தார்.

இதைப்போல இஸ்ரேல் முன் னாள் பிரதமர் பெஞ்சமின் நெடன்யாகூ, இராணுவ அமைச்சர் பென்னி காண்ட்ஸ், அவுஸ்ரேலிய தூதரகம், பிரெஞ்சு தூதர், சிங்கப்பூர் தூதரகம், மாலைதீவு அதிபர் இப்ராகிம் சொலி, முன்னாள் அதிபர், தைவான் வெளியுறவு அமைச்சகம், பூடான் பிரதமர் என பல நாடுகளின் தலைவர்கள் இரங்கல் தெரிவித்து உள்ளனர். (நி)

# புருண்டி சிறையில் தீ விபத்து 38 கைதிகள் உடல் கருகிப் பலி

(கிடேகா)

கிழக்கு ஆபிரிக்க நாடான புருண்டியின் மத்திய பகுதி யில் அமைந்துள்ள கிடேகா மாகாணத்தின் தலைநகர் கிடேகாவில் சிறைச்சாலை கடந்த செவ்வாய்க்கிழமை திடீரென தீப்பிடித்தது.

கண் இமைக்கும் நேரத் தில் தீ சிறைச்சாலை முழு வதிலும் பரவியது. இதனால் பதறிப்போன கைதிகள் அங்கும் இங்குமாக ஓட்டம் பிடித்தனர்.

சிறைக்காவலர்கள் சிறையில் இருந்த தீயணைப்பு சாதனங்களைக் கொண்டு தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். ஆனால் தீ கட்டுக்கடங்காமல் எரிந்ததால் அவர்களால் தீயை அணைக்க முடியவில்லை.

இதற்கிடையில் இந்த சம்பவம் குறித்து தகவல் அறிந்து வந்த தீயணைப்பு வீரர்கள் நீண்ட நேரம் போராடி தீயை முழுமையாக அணைத்தனர்.

ஆனால் அதற்குள் தீயின் கோரப்பிடியில் சிக்கி கைதிகள் 38 பேர் சம்பவ இடத்திலேயே உடல் கருகி பரிதாபமாக உயிரிழந்தனர்.

மேலும் 69 கைதிகளு க்கு பலத்த தீக்காயம் ஏற்பட்டது. அவர்கள் உடனடியாக மீட்கப்பட்டு அருகில் உள்ள மருத்துவமனைகளில் சிகிச் சைக்காக அனுமதிக்கப்பட்டனர். (நி)

# விபத்துக்குள்ளான ஹெலிகொப்டரின் கறுப்பு பெட்டி கண்டுபிடிப்பு

(டில்லி)

முப்படைகளின் தலைமை தளபதி பிபின் ராவத் பயணித்த ஹெலிகொப்டரின் கறுப்பு பெட்டி கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதனைகொண்டு விபத்துக்கான காரணம் குறித்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (நி)

## நல்லூர் பிரதேச சபையின் 2022ம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் மக்கள் பார்வைக்கு

நல்லூர் பிரதேச சபையின் 2022ஆம் ஆண்டிற்கான நிகழ்ச்சித்திட்ட வரவு- செலவுத் திட்டம் 1987ஆம் ஆண்டு பிரதேச சபைச் சட்டத்தின் 15ஆம் இலக்க 168ஆம் பிரிவிற்கமைய தயாரிக்கப்பட்டு 07.12.2021ஆம் திகதிய சபை அமர்வில் அங்கீகரிக்கப்பட்டு 09.12.2021 திகதி தொடக்கம் 22.12.2021ஆம் திகதி வரை பிரதேச சபையின் தலைமை அலுவலகம், உப அலுவலகங்கள் மற்றும் பொது நூலகங்களில் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது என்பதுடன் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

ப.மயூரன்
தவிசாளர், நல்லூர் பிரதேச சபை
(C-3209)

## பாராட்டி வாழ்த்துகிறோம்



திருமதி. தர்சினி பார்த்தீபன்

எமது பாடசாலையின் ஆசிரியர்
திருமதி.தர்சினி பார்த்தீபன் அவர்கள்
02.11.2021 அன்று இலங்கை திறந்த
பல்கலைக்கழகத்தில் இணைய வழி
ஊடாக நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில்
கல்வி முதுமாணிப் பட்டத்தினை
(M.Ed) பெற்றுக் கொண்டமையையிட்டுப்
பாராட்டி வாழ்த்துவதுடன் அவர்
மேலும் பல பட்டங்கள்
பெற வாழ்த்துகின்றோம்.

(C-3208)

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு தீமோர் போன்ற கொள்கைகள் அவசியம்

# காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் கோரிக்கை



(வவுனியா)

**தமிழர்களைப் பாதுகாப்பதற்கு கிழக்குத் தீமோரை போன்று சில பொறிமுறைகளை அமைக்குமாறு ஐ.நாவிடம்கேட்பதாக வவுனியாவில்நேற்று 1757 ஆவது நாளாக தொடர் போராட்டம் மேற்கொள்ளும் காணாமல் போனவர்களின் உறவினர்களின் சங்கத்தினர் தெரிவித்தனர்.**

காணாமல் போன உறவினர்களால் நேற்று முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டுவிட்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர். தொடர்ந்து கருத்துத்தெரிவித்த அவர்கள், மனித உரிமைகள் தினம் ஒவ்வொரு ஆண்டும் டிசெம்பர் 10 அன்று அனுசரிக்கப்படுகிறது. ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை 1948 இல், ம்னித உரிமைகளுக்கான உலகளாவிய பிரகடனத்தை ஏற்றுக்கொண்ட நாளாகும்.

பாகுபாடு இல்லாமல், இந்த உரிமைகளுக்கு அனைவருக்கும் உரிமை உண்டு. சுதந்திரத்திற்குப் பிறகு தமிழர்களின் மனித உரிமைகள் மீறப்பட்டு வருகின்றன. 2009 இல் படுகொலை செய்யப்பட்ட 1 ஒரு இலட்சத்து 46 ஆயிரம் தமிழர்களைக் காப்பாற்ற ஐ.நா.தவறிவிட்டது.

படுகொலை, போர்க்குற்றங்கள், இனச் சுத்திகரிப்பு மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் போன்ற பாரிய அட்டூழியக் குற்றங்களை சர்வதேச சமூகம் மீண்டும் ஒரு போதும் நிறுத்தத் தவறாது என்பதை உறுதிப்படுத்த முயல்கிறது. எமது தாயகமான வட கிழக்கிற்கு நிரந்தரமான மீளப் பெற முடியாத, பாதுகாப்பான மற்றும் பாதுகாக்கப்பட்ட அரசியல் தீர்வைக் காணும் வரையில் தமிழர்களைப் பாதுகாப்பதற்கு கிழக்குத் தீமோரைப் போன்று சில பொறிமுறைகளை அமைக்குமாறு ஐ.நாவிடம் நாம் கேட்டுள்ளோம் என அவர்கள் சுட்டிக்காட்டினர். (5-299)

# வீதியோர பற்றைகளை அகற்றக் கோரிக்கை



(அக்கராயன்)

பூநகரி 10 ஆம் கட்டையில் இருந்து முக்கொம்பன் கிராமத்திற்குச் செல்லும் வீதியின் இருபுறப் பற்றைகளையும் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி முக்கொம்பன் பொது அமைப்புகள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

குறித்த வீதியில் பயணிப்பவர்கள் விலங்குகளில் மோதுண்டு விபத்துகளை எதிர்கொள்வதாகவும் பயிர்ச் செய்கைக் காலங்களில் யானைகள் காடுகளில் இருந்து குறித்த வீதியில் மாலை 4 மணிக்குப் பின்னர் நடமாடி வீதியில் பயணிப்பவர்களைத் தாக்க முற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

முக்கொம்பனில் இருந்து 10 ஆம் கட்டை சந்தி வரையான எட்டு கிலோ மீற்றர் தூர வீதியின் இருபுறப் பற்றைகளையும் துப்புரவு செய்வதன் மூலம் இரவு வேளைகளில் பயணிப்போர் பாதுகாப்பாகச் செல்ல முடியும். (5-6-350)



மன்னார் மறைமாவட்டத்தின் பேசாலை புனித வெற்றி அன்னை ஆலய வருடாந்த பெருவிழா திருப்பலி நேற்று முன்தினம் புதன்கிழமை காலை கூட்டுத்திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப்பட்டது. பேசாலை பங்குத்தந்தை ஏ.ஞானப்பிரகாசம் தலைமையில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை, அருட்தந்தை மாக்கஸ், அருட்தந்தை எமிலியானுஸ்பிள்ளை ஆகியோர் இணைந்து கூட்டுத்திருப்பலி ஒப்புக் கொடுத்தனர். திருப்பலியைத் தொடர்ந்து திருச்சொரூப பவனி இடம்பெற்று மறைமாவட்ட ஆயரினால் திருச்சொரூப ஆசி பக்தர்களுக்கு வழங்கப்பட்டது.

(படம்:-யோசப்நயன்)

# அத்துமீறி காணிகள் பிடித்தவர்கள்

# உடனடியாக வெளியேறவும் நீதிமன்று அதிரடி தீர்ப்பு

(வவுனியா)

வவுனியா பண்டாரிக்குளத்தின் அலைகரை பகுதியினை அத்துமீறி பிடித்த ஆறு பேர் உடனடியாக அவ்விடத்தினை விட்டு வெளியேற வேண்டும் என்று வவுனியா நீதிமன்று தீர்ப்பு வழங்கியுள்ளதாக வவுனியா மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் உதவி ஆணையாளர் எஸ்.விஸ்ணுதாசன் தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், வவுனியா மாவட்டத்தில் குளங்களிற்கு சொந்தமான காணிகளை அடாத்தாக பிடித்தல் மற்றும் வயற்காணிகளை அடாத்தாக பிடித்து மண் நிரவி வீடுகள் அமைக்கும் செயற்பாடுகள் தொடர்ந்து இடம்பெற்று வந்துள்ளன.

வவுனியா கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் பிரதி ஆணையாளரால் பண்டாரிக்குளத்தின் அலைகரை பகுதியில் குளத்திற்கு சொந்தமான காணியை அத்துமீறி பிடித்தமை தொடர்பாக 32 வழக்குகள் தொடரப்பட்டன.

இந்நிலையில் 6 வழக்குகளிற்கான தீர்ப்பு நீதிமன்றால் நேற்று முன்தினம் வழங்கப்பட்டுள்ளது. அந்த வகையில் அத்துமீறி காணி பிடித்த 6 பேரும் அந்த இடத்தினை விட்டு வெளியேற வேண்டும் என்று நீதிமன்றால் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார். அத்துடன் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவே இந்த விடயத்தினை நாம் தெரியப்படுத்துகின்றோம். ஏனெனில் குளக் காணிகளை அத்துமீறி பிடிக்கும் செயற்பாடுகள் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றது.

இப்படியான தீர்ப்புக்கள் எதிர்காலத்தில் இவ்வாறான அத்துமீறல்களை குறைப்பதற்கான ஆரம்பகட்டமாக இருக்கும் என நாம் பார்கின்றோம். குளங்களையும் வயல்களையும் பாதுகாக்க வேண்டியது எமது எதிர்கால நீண்டகாலத் தேவை. இதற்காகவே வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. எனவே எமது மாவட்டத்தில் குளங்களை அடாத்தாக பிடித்தவர்களிற்கு எதிராக தொடர்ந்தும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். எனவே பொதுமக்கள் காணிகளை கொள்வனவு செய்யும் போதும் வீடுகளை அமைக்கும் போதும் பொருத்தமான இடங்களைத் தெரிவு செய்வது நன்மை பயக்கும் என்பதே எனது வேண்டுகோள். எனவே பொதுமக்களின் ஒத்துழைப்பினையும் நாம் வேண்டி நிற்கின்றோம் எனவும் தெரிவித்தார். (5-6-299)

# கரைதுறைப்பற்று பிரதேசசபை பாதீடு நிறைவேற்றம்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான பாதீடு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

கரைதுறைப்பற்று பிரதேச சபை அமர்வு நேற்று தவிசாளர் க.விஜிந்தன் தலைமையில் இடம்பெற்றது. சபையின் இருபத்து நான்கு உறுப்பினர்களில் நான்கு உறுப்பினர்கள் சபைக்கு சமுகமளிக்காத நிலையில் சமுகமளித்த 20 உறுப்பினர்களின் பூரண சம்மதத்தோடு 2022 ஆம் ஆண்டுக்கான பாதீடு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. (5-281)

# கரையொதுங்கும் டொல்பின்கள்



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அளம்பில் பகுதியில் உயிரிழந்த நிலையில் மீன்கள் கரையொதுங்கி வருகின்றன. டொல்பின் வகையைச் சேர்ந்த மீன்கள் சிலவே இவ்வாறு உயிரிழந்த நிலையில் கரையொதுங்கி வருகின்றன. (5-281)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்போதைய பிரச்சினைகளுக்கு அரசு உடனடித் தீர்வு வழங்க வேண்டும்

(கொழும்பு)

நாட்டில் தற்போது நிலவி வரும் பிரச்சினைகளுக்கு அரசு உடனடியாகத் தீர்வு வழங்க வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கோரிக்கை விடுத்தார்.

நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாட்டில் அரசியலில் ஈடுபட்டுள்ள நேர்மையான, ஊழல் மோசடிகளற்ற, நாட்டை நேசிக்கும் நபர்களை ஒன்றிணைத்து விரிவான அரசியல் சக்தியொன்றை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இவ்வாறான ஓர் சக்தியை உருவாக்கி அதன் மூலம் நாட்டின் அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும்.

நாட்டில் தற்போது நிலவும் உரப்பிரச்சினை, பொருளாதாரப் பிரச்சினை, எரிவாயு மற்றும் பொருட்களின் விலை உயர்வு போன்ற விடயங்கள் குறித்து ஒருவரை ஒருவர் குற்றம் சுமத்தாது அரசு தனது கடமைகளைச் செய்ய வேண்டும்.

நாட்டு மக்கள் இன்னமும் உரம் கிடைக்காது அவதியுறுகின்றனர். நாட்டின் பல பகுதிகளிலும் எரிவாயு சிலிண்டர்கள் வெடிப்புச் சம்பவங்கள் பதிவாகி வருகின்றன.

நாட்டில் தற்போது நிலவி வரும் பிரச்சினைகளுக்கு அரசு தீர்வு வழங்க வேண்டும். மக்களுக்காக அரசு தனது கடமைகளைச் செய்ய வேண்டும். இதற்கான பூரண ஒத்துழைப்பை வழங்கத் தயார்" என அவர் தெரிவித்தார். (நி)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்



## விரதங்கள்

## செல்வம் தரும் லட்சுமி குபேர வழிபாடு



குபேர எந்திர கோலம் போட்டு நாணயங்களை அதில் வைத்து முடித்ததும், எந்திரத்தின் முன் சிறிய விளக்கு ஏற்றி வைத்து பூஜையை தொடங்க வேண்டும். 'மகாலட்சுமி தாயே! என் கடன்கள் விரைவில் தீர வேண்டும். எனக்கு இலாபம் கிடைக்க வேண்டும்' எனக் கூறி விட்டு ஒவ்வொரு கட்டத்திலும் உள்ள நாணயத்தின் மீதும், பூக்களை போட வேண்டும். அப்படி பூக்களை போடும் போது எழுத்துக்கள் அழிந்து விடாமல் இருக்குமாறு கட்டத்தில் வைத்துள்ள நாணயம் மீதே பூக்களைப் போட வேண்டும்.

அப்படி 9 முறை வேண்டிக் கொண்டு ஒவ்வொரு கட்டத்திலும் பூவை வைத்து பின் எந்திரத்துக்கு கற்பூரம் காட்டிய பின் அந்த கோலத்தை வணங்கி விட்டு பூஜையை முடிக்க வேண்டும். பூஜை முடிந்த பின்னர் உடனே கோலத்தை அழித்து விடக்கூடாது. மறுநாள் துணியால் துடைத்து எடுக்க வேண்டும்.

மறுநாள் வரை அந்தக் கோலம் நாணயத்துடன் அப்படியே இருக்க வேண்டும். எந்திரத்தின் மீது நேரடியாக விளக்கு மாற்றால் பெருக்கக்கூடாது. கோலத்தை துடைக்கும் முன்னே 9 நாணயங்களையும் எடுத்து தனியாக வைத்து விட வேண்டும். ஒன்பது நாட்களும் உபயோகிக்கும் 81 நாணயங்களையும் பத்திரமாக எடுத்து வைத்து கொள்ள வேண்டும்.

அது லட்சுமி தேவிக்கு பூஜிக்கப்பட்ட நாணயம் ஆகும். அன்று மாலைக்குள் ஒன்பது சுமங்கலி பெண்களுக்கு வெற்றிலை, பாக்கு, பழம் தர வேண்டும். 9 நாட்களும் பூஜித்த நாணயங்களை லட்சுமி தேவியின் உண்டியலில் போட வேண்டும். அதை போடும் முன்பு தான் அவளுக்கு செலுத்தும் அந்த காணிக்கைகளை போல் தனக்கும் பல மடங்கு செல்வம் தர வேண்டும் என லட்சுமி தேவியை மனமார வேண்டிக் கொள்ள வேண்டும்.

இந்த பூஜையை செய்பவரால் தொடர்ந்து செய்ய முடியாத நிலை ஏற்பட்டால் வீட்டில் உள்ள வாரிசுகள் செய்யலாம். இதை செய்தால் வீட்டில் அமைதி நிலவும். செல்வம் நிலைக்கும்.

(முற்றும்)

# செய்தித்துளிகள்

## கடற்படை அதிகாரிகளுக்கு பதவி உயர்வு

(கொழும்பு)

1,786 கடற்படை அதிகாரிகளுக்கு பதவி உயர்வு வழங்க ப்பட்டுள்ளது. இலங்கை கடற்படையில் 71 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இவ்வாறு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. (நி)

## 100 அடி பள்ளத்தில் பாய்ந்த கார்

### சாரதி பலத்த காயம்

(ஹற்றன்)

தலவாக்கலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சென்.கிளயார் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில், சாரதி படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக நுவரெலியா மாவட்ட வைத் தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்று அதிகாலை, நுவரெலியா பகுதியிலிருந்து கொட்டகலை பகுதிக்கு சென்ற கார் ஒன்று நுவரெலியா- ஹற்றன் பிரதான வீதி, சென்.கிளயார் பகுதியில் வைத்து வீதியை விட்டு விலகி சுமார் 100 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக் குள்ளாகியுள்ளது.

குறித்த காரில் சாரதி மாத்திரம் பயணித்துள்ளதாகவும் அவரே இவ்வாறு காயங்களுக்குள்ளாகி உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை தலவாக்கலை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (நி)

## இலவச அன்டிஜன் பரிசோதனை

(கொழும்பு)

இலவசமாக அன்டிஜன் பரிசோதனையை முன்னெடுக்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அதனடிப்படையில், கொழும்பு கெம்பல் மைதானத்தில் மாத்திரமே இலவசமாக அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது. (நி)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 300 | 320 | 280 | 350 |
| உருளைக்கிழங்கு | 150 | 150 | 130 | 150 |
| பச்சைமிளகாய் | 500 | 600 | 600 | 500 |
| தக்காளி | 480 | 500 | 450 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 600 | 60 | 60 | 50 |
| கோவா | 350 | 350 | 400 | 400 |
| கரட் | 340 | 360 | 360 | 400 |
| பூசணி | 60 | 60 | 50 | 60 |
| புடோல் | 300 | 300 | 250 | 300 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 180 | 180 | 180 | 200 |
| பெரிய வெங்காயம் | 150 | 160 | 150 | 160 |
| பாகற்காய் | 500 | 600 | 500 | 800 |
| வெண்டிக்காய் | 200 | 210 | 240 | 300 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 120 | 150 |
| பயற்றங்காய் | 550 | 450 | 400 | 400 |
| லீக்ஸ் | 340 | 350 | 360 | 400 |
| பீற்றூட் | 200 | 120 | 200 | 250 |
| கறிமிளகாய் | 500 | 700 | 800 | 500 |
| முருங்கைக்காய் | 700 | 600 | - | 800 |
| போஞ்சி | 400 | 340 | 400 | 400 |
| கத்தரிதம்புள்ள | 250 | 300 | - | 300 |
| கீரை - 1 பிடி | 120 | 130 | - | 120 |
| தேசிக்காய் | 300 | 250 | 250 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 70 | 60-90 |
| இராசவள்ளி | 250 | 250 | 200 | 220 |
| வெங்காயப்பூ | 550 | 550 | - | - |
| முள்ளங்கி | 140 | 140 | - | 280 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 60 |
| வல்லாரை | 50 | 50 | 20 | 40 |
| ஈரப்பலா | 130 | 120 | 100 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிவாயு வெடிப்பு சம்பவங்கள்; பாதிக்கப்பட்டோருக்கு இழப்பீடு

## இராஜாங்க அமைச்சர் லசந்த தெரிவிப்பு

**(கொழும்பு)**

**சமையல் எரிவாயு சிலிண்டர் வெடிப்பு சம்பவங்களினால் ஏற்பட்ட உடைமைகள் மற்றும் உபகரணங்கள் சேதங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கத்தினால் உரிய நட்டஈடு வழங்கப்படுமென இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்தார்.**



நாட்டின் பல பாகங்களில் திடீரென அதிகரித்துள்ள உள்நாட்டு சமையல் எரிவாயு சிலிண்டர் வெடிப்பு சம்பவங்கள் தொடர்பில் விசாரணையை முன்னெடுப்பதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் சாந்த வல்பொல தலைமையிலான எட்டுப் பேர் கொண்ட நிபுணர் குழு தனது அறிக்கையை ஒரு வார காலத்துக்குள் வெளியிடவுள்ளது.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பாக தெளிவான திட்டமொன்று உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (நி)

# இணையம் ஊடான வாகன வருமான அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதில் சிக்கல்

(கொழும்பு)

நாடு முழுவதும் வாகன வருமான அனுமதிப் பத்திரத்தை இணையம் ஊடாக பெற்றுக் கொள்ளும் செயற்பாடு தடைப்பட்டுள்ளது.

இணையம் ஊடாக இந்த வசதியைப் பெற்றுக் கொள்ளப் பிரவேசிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்தமையை அடுத்து இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் மாகாண காரியாலயங்களின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

எவ்வாறாயினும் தொழில்நுட்ப பிரிவினர் இந்த நிலையை வழமைக்குக் கொண்டு வருவதற்குத் தொடர்ந்து சேவையில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நாடு முழுவதும் வாகன வருமான அனுமதிப் பத்திரத்தை இணையம் ஊடாக பெற்றுக் கொள்ளும் செயற்பாடு தடைப்பட்டு இரண்டு வாரங்கள் கடந்துள்ளன.

முன்னர் நாளாந்தம் இணையம் ஊடாக குறித்த வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு 30 பேர் பிரவேசித்த நிலையில் தற்போது அந்த எண்ணிக்கை 60 ஆயிரமாக அதிகரித்துள்ளதாக தகவல் தொழில்நுட்ப முகவர் நிறுவன பேச்சாளர் தெரிவித்தார். (நி)

# ஒமிக்ரோன் வேகமாக பரவாது

## மருத்துவர் சந்திம தகவல்



(கொழும்பு)

இலங்கை, ஐரோப்பா உள்ளிட்ட நாடுகளில் ஒமிக்ரோன் கொரோனா வகை வேகமாகப் பரவாது என ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நோயெதிர்ப்பு மற்றும் மூலக்கூறு மருத்துவத்துறை பணிப்பாளர் மருத்துவர் சந்திம ஜீவந்தர குறிப்பிட்டுள்ளார்.

தனது டுவிட்டர் பக்கத்தில் அவர் இவ்வாறு பதிவேற்றியுள்ளார். குறித்த பதிவில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது. "தென்னாபிரிக்க விஞ்ஞானிகள் குழுவொன்று மேற்கொண்ட பரிசோதனையில் ஒமிக்ரோன் பற்றிய இந்தத் தகவல் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த வைரஸ் நோய்த் தடுப்பு மருந்துகளுக்கு கட்டுப்பாடாவிட்டாலும் பூஸ்டர் தடுப்பூசி ஊடாக அதில் இருந்து பாதுகாப்பை பெற்றுக்கொள்ள முடியும் என விஞ்ஞானிகள் குறிப்பிட்டுள்ளனர்.

ஆனாலும், இந்த வைரஸ் குறித்து உறுதியான முடிவுக்கு வர முடியாது. ஆகவே அதனை ஆய்வு செய்வதற்கு அதிக நேரம் தேவை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# இன்று ஒரு தகவல்

## நமக்கு நாமே வழிகாட்டியா?

முழுக்க முழுக்க நன்மையையோ வெற்றியையோ தரக்கூடிய நடவடிக்கைகளில் ஒரு முடிவுக்கு வருவதைப் பற்றித் தயக்கம் காட்ட வேண்டிய அவசியமே இல்லை.

ஆனால் அப்படியா இப்படியா? என்று முடிவுக்கு வரமுடியாத சூழ்நிலையில் மற்றவர்களைக் கலந்து கேட்டு முடிவுக்கு வருவதில் தவறென்ன இருக்க முடியும்?

எல்லாருக்கும் தெரிந்துவிடக்கூடாது என்ற சூழ்நிலையில் மற்றவர்களிடம் யோசனை கேட்பது புத்திசாலித்தனமான காரியமல்லத்தான்.

இத்தகைய சூழ்நிலையில் மனைவி கணவனிடமும் கணவன் மனைவியிடமும் யோசனை கேட்கலாம். தாய்,தந்தையர் மற்றும் நெருங்கிய நண்பனிடமும் யோசனை கேட்கலாம். ஆனால் இவர்களிடங்கூட கேட்க இயலாத முடிவு என்றால் அது நிச்சயம் தவறான செயலாகவே இருக்கும் என்று சொல்லி விடலாம்.

நாம் எடுக்கப்போகும் முடிவின் மீது நமக்குத் தெரிந்தோ தெரியாமலோ ஒருவித வெறுப்போ விருப்போ ஏற்பட்டு விடுகிறது. இது நம்முடைய தீர்க்க தரிசனத்தை மறைத்துவிடும். நிலைமை தெரியாமல் ஆக்கிவிடும். இதன் காரணமாக நம் முடிவு தவறாக அமைந்துவிடக்கூடும்.

ஆனால் மற்றவர்களின் யோசனைகள் விருப்பு வெறுப்பு இன்றி இருக்க அதிகமான வாய்ப்பு இருக்கிறது.

அனுபவத்திலும் வயதிலும் முதிந்தவர்கள் தவறு செய்ய முயல அவர்களது மனத்தை மாற்றி நல்வழிப்படுத்தியவர்கள் வயதிலும் அனுபவத்திலும் குறைந்தவர்களாக இருந்த சம்பவத்தை எத்தனை முறை வரலாற்றிலும் புராணங்களிலும் இலக்கியங்களிலும் ஏன் வாழ்க்கையில் கூடக் கண்டிருக்கிறோமே!

குடும்ப நன்மை காரணமாக நாம் ஒரு முடிவுக்கு வரவேண்டியிருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். மற்றவர்களின் சம்மதத்தைக் கேட்காமல் ஒரு முடிவுக்கு வருகிறோம். இத்தகைய முடிவுகளின் மூலமாக ஏற்படும் பின் விளைவுகள் பலன்கள் மகிழ்ச்சிக்குரியவையாக அமைந்து விட்டால் அந்த மகிழ்ச்சியில் பங்குகொள்ள அனைவரும் வருவார்கள். ஆனால் அவையே துன்பத்தைத் தருமானால் எல்லாரும் நம்மிடமிருந்து ஒதுங்கிவிடுவதுடன் நிற்காமல் நம்மீது பழி சுமத்தவும் தயங்கமாட்டார்கள். துன்பம் என்பது ஓராயிரம் உறவினர்களையும் நம்மிடமிருந்து துரத்தியடிக்கும் பொல்லாத கல் என்பதை நாம் உணர வேண்டும்.

மற்றவர்களின் அரிய உயரிய யோசனைகளுடன் ஒரு காரியத்தில் இறங்குவோமானால் அவர்களால் எதிர்பார்க்கப்பட்டக் குற்றங்களையும் குறைகளையும் நம்மால் சமாளிக்கவும் முன்னெச்சரிக்கையாக இருக்கவும் முடியும்.

மேலும் அவர்கள் நம் நடவடிக்கைகளினால் ஏற்படக்கூடிய நன்மைகளை எடுத்துச் சொல்லியிருந்தால் அவை நமக்கு உற்சாகம் தந்து உரமூட்டக் கூடியவனாக இருக்கும்.

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் அரங்கம்

## சாம்பல் நிற முயலும் குள்ள நரியும்

முன்னொரு காலத்தில் சாம்பல் நிற முயலும், தந்திரமான குள்ள நரியும் இருந்தன.

பருவநிலை மாறியது. விரைவிலேயே வந்துவிட்டது குளிர்காலம். பனிப்புயல் வீசியது.

வானத்திலிருந்து சிறு சிறு பனித்துகள்கள் மழைபோல் கொட்டத் தொடங்கின. குளிரின் கடுமையால் முயலின் சாம்பல் நிறம் முற்றிலும் வெளுத்து பனி வெண்மையானது.


'இந்தக் குளிரைத் தாங்க முடியவில்லை. நான் அவசியம் ஒரு குடிசை கட்டிக் கொள்ளத் தான் வேண்டும்" என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டது முயல்.

அது கொஞ்சம் மரப்பட்டைகளைச் சேகரித்து வந்து வேலையைத் தொடங்கியது. வீடு கட்டும் வேலையில் தீவிரமாக ஈடுபட்டிருந்த முயலைப் பார்த்து குள்ளநரி கேட்டது.

"அடேய் முயல்பயலே, நீ என்னதான் செய்து கொண்டிருக்கிறாய்?"

'நீ பார்த்துக் கொண்டுதானே இருக்கிறாய் குள்ள நரி அக்கா நான் கதகதப்பாக வசிக்க ஒரு குடிசை கட்டிக் கொண்டிருக்கிறேன்."

'ஆமாம், ஆமாம். ரொம்ப நல்ல யோசனைதான்" என்ற குள்ள நரி, பிறகு தனக்குள் இரகசியமாகச் சொல்லிக் கொண்டது.



"நாமும் ஏன் ஒரு வீட்டைக் கட்டிக் கொள்ளக்கூடாது. ஆனால் நான் கட்டப்போகும் வீடு ஒரு பளிங்கு மாளிகையாக இருக்கும்.

ஆமாம், நான் ஒரு அற்புதமான பளிங்கு அரண்மனைபோன்று என் வீட்டைக் கட்டுவேன். முட்டாள்கள்தான் மரப்பட்டைகளால்வீட்டைக் கட்டுவார்கள். ஹா... ஹா...ஹா...'

பிறகு அந்தக் குள்ள நரி, பெரிய பெரிய பனிக் கட்டிகளைத் தூக்கி வரத் தொடங்கியது. ஒரு இடத்தைத் தேர்ந் தெடுத்து அந்தப் பனிக்கட்டிகளை ஒன்றின் மீது ஒன்றாக அடுக்கியது. இரண்டு வீடுகளும் ஒரே நேரத்தில் கட்டி முடிக்கப்பட்டன. முயலும், நரியும் அதனதன் வீட்டிற்குள் குடி புகுந்தன.

குள்ளநரி தன் பனிக்கட்டி வீட்டின் ஜன்னலில் அமர்ந்தபடி முயலை உற்றுப் பார்த்து, "இந்த முயல் பயலைப்போல ஒரு மட சாம்பிராணி எங்காவது இருப்பானா!' என்று நினைத்து கேலிச் சிரிப்புச் சிரித்தது.

"இவன்நாகரிகம்தெரியாத நாட்டுப் புறத்தான்! போயும் போயும் அந்த மரப்பட்டைகளை வைத்து வீடு கட்டியிருக்கிறானே, என்ன ஒரு கோமாளித்தனம்! என்னுடைய வீடு தூய்மையாகவும், பளபளப்பாகவும் இருக்கிறது.

(தொடரும்)

# மகாபாரதம்

**269**



இத் தொழிலைப் பற்றி நான் கவலைப்படவில்லை. என் வாழ்வில் சில நெறி முறைகளை பின்பற்றி வருகிறேன்.

சத்தியம் தவறுவதில்லை. உண்மையே பேசுகிறேன். வினைப் பயனை நம்புகிறேன்.

யாரையும்இழிவாகக் கருதுவதில்லை. இன்ப துன்பங்களை சமமாய் எண்ணுகி றேன். நாட்டில் நல்லாட்சி நடைபெறுகிறது. ஜனக மாமன்னன் நீதி தவறாது ஆட்சி செய்கிறான்.

நானாக எதையும் கொல் வதில்லை. பிறரால் கொல்லப்பட்ட மாட்டிறைச்சிகளை விற்கிறேன். ஆனால் நான் புலால் உண்பதில்லை.

நோன்பு நோற்கிறேன். பிறரது புகழ்ச்சியையும், இகழ்ச்சியையும் சமமாகக் கருதுகிறேன்.

ஒவ்வொருவரும் தன்னால் முடிந்த அளவிற்கு தானம் செய்ய வேண்டும். காமத்தாலோ, பயத்தாலோ தருமத்தை விட்டுவிடக் கூடாது. அரிய காரியங்களைச் செய்ய தளர்ச்சியடையக் கூடாது.

நல்ல செயல்களையே எப்போதும் செய்ய வேண்டும். ஒரு பாவி தன் பாவச் செயலால் அழிந்து போகிறான். தூயோரைப் பழிப்பதும், தருமத்தில் பற்றின்மையும் அழிவைத் தருகின்றன.

நல்லோர்கள் அனைவரிடமும் பணிவுடன் இருப்பர். அடக்கம் இல்லாதவர்கள் தற்புகழ்ச்சியில் ஈடுபட்டுத் தாழ்வடைகின்றனர். தவறு செய்பவர் அத் தவறை உணர்ந்து வருந்துவாராயின் அவர்களைப்பாவ கர்மம் பற்றுவதில்லை.

ஒருவன் தவறான செயல்களைச் செய்துவிட்டு "நான் அப்படிச் செய்யவில்லை" என சாதித்தாலும் அவன் பாவ கர்மத்தினின்றும் தப்ப முடியாது.

எவன் தன் குற்றம் உணராது பிறர் குற்றம் காண்கின்றானோ அவனுக்கு நற்கதி கிடைக்காது. அவன் மறுமையிலும் துன்புறுவான். நற்செயல்கள் செய்தால் ஒருவன் எல்லாப் பாவங்களையும்தொலைத்து விடுகின்றான், பேராசையுள்ளவர்கள் பாவப்படு குழியில் வீழ்வர்" என்றார் தருமவியாதர்.

கௌசிகன் தக்கோரின் மேலான ஒழுக்கங்களைக் கூறுமாறு கேட்க, வியாதர் பதில் உரைத்தார். "மேலான ஒழுக்கங்களில் தானம், தவம், யாகம், ஆகமம், சத்தியம் ஆகிய ஐந்தும் குறிப்பிடத்தக்கன.

ஆகமத்தின் அடிப்படை சத்தியம். சத்தியத்தின் அடிப்படை புலனடக்கம். புலனடக்கத்தின் அடிப்படை போகங்களைத் துறத்தல். இவை எப்போதும் மேலான ஆசாரங்களில் நிலை பெற்றுள்ளன.

எப்போதும் உண்மையையே உரைத்து, தருமத்தைச் செய்து, நிதானத்துடன் ஆகமக் கருத்துகளைக் கவனமாக கற்று உணர்ந்து அறம், பொருள், இன்பங்களை அடைபவர்கள் மேலான ஒழுக்க சீலர் ஆவர்.

ஐம்பொறிகளையும் அடக்கி வென்றவர்கள் மோட்சத்தை அடைவர். அல்லாதார் துன்பக் கடலில் மூழ்குவர். கொல்லாமை, வாய்மை, எல்லா உயிரிடத்தும் அன்புடன் இருத்தல் ஆகிய மூன்றும் உயர்ந்த தருமம் ஆகும்.

இம்மூன்றில் கொல்லாமை மிக உயர்ந்த தருமம். அது வாய்மையில் நிலை பெறுகிறது. சாதுக்களின் தருமம் என்பது மேலான ஒழுக்கமாகும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனுக்குள் இருக்கும் தெய்வத்தை உணர்ந்து வாழ்வதுதான் நமது இலட்சியம்.

~ ஜெயகாந்தன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்

பகை கொண்ட உள்ளம் துயரத்தின் இல்லம் தீராத கோபம் யாருக்கென்ன இலாபம் என்பது ஒரு திரைப்படப் பாடல்

அந்தப் பாடலில் உள்ள அர்த்தம் மிகவும் கனதியானது.

ஆக, பகையும் கோபமும் நம்மை அழிக்க வல்லன.

ஆம், கோபமும் பகையும் தன்னையும் அழித்து மற்றவர்களையும் அழித்து விடும்.

எனவே கோபம், பகை என்பன பாரதூரமான எதிர்விளைவை ஏற்படுத்தக்கூடியவை.

கோபத்தினால் ஏற்படக்கூடிய பாதகம் பற்றி யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையின் பொது வைத்திய நிபுணர் சி.சிவன்சுதன் அவர்கள் நித்திலம் என்ற இணையவழி மருத்துவ ஆலோசனைப் பகுதியில் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

கோபம் பகையைத் தரவல்லது. பகை அழிவை ஏற்படுத்துவது.

இதை நாம் கூறும்போது சண்டை என்பதும் பகை என்பதும் ஒத்தபொருள் கொண்டவை என்று யாரும் நினைத்துவிடக்கூடாது.

சண்டை வெளிப்படையானது. அதில் ஒரு தரப்பு நியாயம் துலங்கும். சண்டை சமாதானத்தைத் தரக்கூடியது.

ஆனால் பகை அதுவன்று. அதிலும் உட்பகை மிகக் கொடூரமானது. பழிதீர்க்கக்கூடியது. வஞ்சகம் செய்யக்கூடியது.

இராமர் மீது கூனிக்குப் பகை இருந்தது. அதுவும் உட்பகை. அதனால் இராமர் காடேக தசரதச் சக்கரவர்த்தி மாளவேண்டியதாயிற்று.

ஆனால் கூனி ஒருபோதும் இராமருடன் சண்டையிடவில்லை என்பது இங்கு ஈண்டு கவனிக்கத்தக்கது.

இதனால்தான் பகை கொண்ட உள்ளம் துயரத்தின் இல்லம் என்றார் கவியரசர்.

எனவே கோபமும் அதனால் விளையும் பகையும் வேரறுக்கப்பட வேண்டும்.

இதனாலேயே ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும் என்று நம் தமிழ்ப்பழமொழி எச்சரிக்கை செய்தது.

எனினும் இதுபற்றியெல்லாம் நம்மவர்கள் அலட்டிக் கொள்வதில்லை என்பதோடு அந்த விடயத்தை முடிவுறுத்தினால், அதுசரி எதற்காக திடீரென்று கோபமும் பகையும் பற்றிய பதவுரை என்று நீங்கள் யாரேனும் கேட்கலாம்.

அவ்வாறு கேட்டால், வெளிப் பொறிமுறைகளை இலங்கை அரசாங்கம் ஏற்காது என வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கூறியுள்ளார்.

அவர் கூறிய மேற்போந்த விடயம் பொருத்தப்பாடானதன்று. இலங்கை அரசு வெளிநாடுகளுடன் சண்டையிடவில்லை. சண்டையிடுகின்ற தகுதியும் அதற்கு இல்லை.

ஆனால் உலக நாடுகளுடன் பகை கொண்டுள்ளது. அந்தப் பகையின் விளைவுதான் இலங்கையின் இன்றைய கந்தறுநிலை.

ஆம், வெளிநாடுகளுடன் பகைத்துக் கொண்டதால் வேருடன் கெடும் அளவுக்கு இலங்கையின் பொருளாதார நிலை வந்துவிட்டது.

நிலைமை இதுவாக இருக்கையில் வெளிப் பொறிமுறைகளை நாங்கள் ஏற்கமாட்டோம் என வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கூறுவதானது பகை கொண்ட உள்ளத்தின் பிதற்றலாக இருந்தாலும் அதன் விளைவு இலங்கைக்கு மேலும் பாதகத்தை ஏற்படுத்தும் என்பதுதான் உண்மை.

## பாரதியார் சிலை திறப்பு

(அராலி)

பாரதியாரின் உருவச் சிலையை திறந்து வைக்கும் நிகழ்வு நாளை 11 ஆம் திகதி சனிக்கிழமை காலை பத்து மணியளவில் வட்டுக்கோட்டைக் ரோட் முதலாம் ஒழுங்கையில் இடம்பெறும்.

கலாநிதி சிதம்பர மோகன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக இந்தியத் துணைத் தூதர் ராகேஷ் நட்ராஜ் கலந்து கொள்வார். மற்றும் மறவன்புலவு சச்சிதானந்தன், மீஹ சந்துர விமல தேரர் மற்றும் சங்கானை பிரதேச செயலர் திருமதி பிரேமினி பொன்னம்பலம் ஆகியோரும் கலந்து கொள்வர். (5-6-104)

## குடும்பப் பெண்ணுக்கு பாலியல் தொந்தரவு

### கச்சாயில் குடும்பஸ்தருக்கு பொலிஸார் வலைவீச்சு

(அராலி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கச்சாய் பகுதியில் வசித்து வந்த இரண்டு பிள்ளைகளின் தாயார் ஒருவருக்கு, அவரது அயல் வீட்டில் உள்ள குடும்பஸ்தர் பாலியல் தொந்தரவு கொடுத்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

நேற்று முன்தினம் மதியம் 12.30 மணியளவில் குறித்த குடும்பப் பெண்ணின் கணவரும் பிள்ளைகளும் வெளியில் சென்றிருந்த வேளை அயல்வீட்டில் உள்ளவர் அந்தப் பெண்ணின் வீட்டிற்கு சென்று அவருடன் முரண்பட்டார்.

அதன்பின்னர் குறித்த சந்தேகநபர் அந்தப் பெண்ணுக்கு பாலியல் தொந்தரவு கொடுத்துள்ளார்.

இந்நிலையில் குறித்த பெண்ணினால் நேற்று கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. சந்தேகநபர் தலைமறைவாகியுள்ள நிலையில் கொடிகாமம் பொலிஸார் அவரை வலைவீசித்தேடி வருகின்றனர்.(ம-3,104)

## பல்கலைக்கழக அனுமதிக்கான நுழைவுத் திறன் தேர்வுகளை நிறுத்துவதற்கு தீர்மானம்

(கொழும்பு)

எதிர்காலத்தில் பல்கலைக்கழக அனுமதிக்கான திறன் பரீட்சைகளை நடத்துவதில்லை என தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நேற்று முன்தினம்பிற்பகல் பாராளுமன்ற கோப் குழு முன்னிலையில் அழைக்கப்பட்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

முதுகலைப் படிப்பிற்காக 15 புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டுள்ள போதிலும், அவர்கள் கைவிடப்பட்டதன் காரணமாக பெருமளவு பணத்தை இழந்துள்ளனர் என்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சுட்டிக்காட்டினார். (ம-3)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தொல்லியல் மற்றும் மரபுரிமை செயற்றிடங்களை எவ்வாறு உருவாக்குவது எனும் கலந்துரையாடல் நாளை 11 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு இல.199, கோவில் வீதி, நல்லூரிலுள்ள சம காலக் கலை, கட்டடக்கலை மற்றும் வடிவமைப்புக்கான இலங்கை ஆவணக் காப்பகத்தில் இடம்பெறும்.

## மருத்துவ கருத்தமர்வு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள zoom செயலி ஊடான மருத்துவக் கருத்தமர்வுகளானது "யாவர்கும் நலம்" எனும் நிகழ்ச்சித் தொடரில் பிரதி சனிக்கிழமை தோறும் மாலை 7.00மணி - 9.00 மணி வரை இடம்பெற்று வருகின்றது.

இக் கருத்தமர்வுகளில் பிரபல வைத்திய நிபுணர்கள் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இதேவேளை நாளை சனிக்கிழமை 8 மணி தொடக்கம் 9 மணி வரை **"பாலியல் ஆரோக்கியமும் குடும்பக்கட்டுப்பாட்டு முறைகளும்"** எனும் தலைப்பில் Meeting ID: 899 8528 2023, pass code: 354 485 எனும் zoom செயலியூடாக நடைபெறவுள்ள கருத்தமர்வில் அனைவரும் பங்கேற்று பயன் பெறுமாறு வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் உதவிச் செயலாளர் அறிவித்துள்ளார். (ம-3)

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### வழிபட வேண்டாம் அல்லது உருவ வழிபாடு வேண்டாம்

நம்மைச் சேர்ந்தது என்ற உணர்வு இல்லாத வழிபாடு அல்லது உருவ வழிபாடு எப்போதும் பயன்தராது. அத்தகைய வழிபாடு பயம் மற்றும் எட்டி இருத்தல் ஆகியவற்றிற்குக் காரணமாகிறது.

வழிபாடு பற்றி அறிவுப் பிறழ்ச்சி கொண்டவர்கள் சிலர் உண்டு. மற்றவர்கள் வழிபடுவதைப் பார்க்கும் போது அவர்களுக்கு எரிச்சல் ஏற்படுகிறது.

வழிபாட்டு முறைகள் அல்லது உருவ வழிபாடு என்பது உலகின் வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறாக இருக்கலாம். போப்பை சிலர் வழிபடுகிறார்கள். பொப் இசை நட்சத்திரங்களை சிலர் வழிபடுகிறார்கள். (தொடரும்)

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

**அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருஷார்த்தங்களை அடையும் உபாயங்கள்**

ஆயுள் வளர- மாலை வெயில், ஓமப்புகை, இளம் மனைவி, அருவி நீர், இரவில் பால் முதலியன ஆகும்.

தன் கையால் செய்யக்கூடாதவை- படுக்கை விரித்துக் கொள்ளுதல், ஆசனப் பலகை இட்டுக் கொள்ளுதல், அன்னம் படைத்துக் கொள்ளல் இம்மூன்றும் தன் கையால் செய்து கொண்டால் ஆயுள் குறையும்.

இரவில் கூடாதவை- இஞ்சி, பாகற்காய், கஞ்சி, கட்டித்தயிர், கீரைக்கறி, நெல்லிக்காய் உண்ணக் கூடாது. உண்டால் இலட்சுமி கடாட்சம் நீங்கும் (தொடரும்)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 11 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** மல்லாகம் நீதிமன்றம், [illegible] குவேலி, ஏழாலை, கணேஸ்வரம்- தெல்லிப்பழை, அளவெட்டி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், மாதனை, மல்லாகம் சந்தி, மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், மல்லாகம் நீதிமன்றம் பிரதேசம், பன்னாலை, சங்குவேலி, தெல்லிப்பழை, துர்க்காபுரம், உடுவில் மகளிர் கல்லூரி ஆகிய இடங்களிலும்

**[illegible] பிரதேசத்தில்** அரசர்கேணி, இத்தாவில், கச்சார் வெளி, முகமாலை ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** கொன்வெண்ட் வீதி, மன்னார் நகரம், மன்னார் நகரம் இலங்கை மின்சார சபையடி, மூர் வீதி, நளவன்பாடி புதுத் தெரு (பள்ளிமுனை), இளையோர் சேவை மையத்தடி, பள்ளிமுனை, மன்னார் ஸ்ரீலங்கா ரெலிகொம், புனித செபஸ்ரியன் தேவாலயம், யு.சி. மைதானம், மன்னார் ஆவேமரியா ஐஸ் தொழிற்சாலை, கச்சேரி வளாகம், மன்னார் நீர்வழங்கல் சபை, மன்னார் தொலைத் தொடர்பு நிலையம், கார்கில்ஸ் பூட் சிற்றி, மன்னார், எழுத்தூர், எமில்நகர், கொன்னையன் குடியிருப்பு, மாலுவாடி சந்தி, சணி கிராமம், தாழ்வுப்பாடு, தாராபுரம், தாராபுரம் திட்டம், எருக்கலம்பிட்டி நீர்வழங்கல் திட்டம், மன்னார் மருத்துவமனை, கடற்படை முகாம், ஓலைத்தொடுவாய், புதிய சில்க்ரோடு அகுடிக் கம்பனி பிறைவேட் லிமிட்டெட் (கடலுணவுக் களஞ்சியம்), நீர்வழங்கல்- தோட்டக்காடு, இலங்கை போக்குவரத்துச் சபை மன்னார் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பண்டைய எண் முறைமைகளும் பழந்தமிழரின் அளவை முறைகளும்-பகுதி I

29

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



### ஜப்பான் நாட்டவரின் பண்டைய எண்பலகை



### ஜப்பானிய எண்கள்

ஜப்பானிய எண்கள் என்பது ஜப்பானிய மொழியில் பயன்படுத்தப்படும் எண் பெயர்கள். இலக்கத்தில் (எழுத்தில்). அவை சீன எண்களைப் போலவே இருக்கின்றன. அவ்விலக்கங்களுக்கு இரண்டு உச்சரிப்புகள் பயன்படுத்தப்படுகின்றன: சீன எழுத்துக்களின் சீன-ஜப்பானிய (ஒன்யோமி) உச்சரிப்புகள் மற்றும் ஜப்பானிய யமடோ கோடோபா (சொந்த சொற்கள், குன்யோமி) உச்சரிப்புகள்.

### ஜப்பானிய எண்கள்

| | | |
|---|---|---|
| 〇 0 | 十一 11 | 百 100 |
| 一 1 | 十二 12 | 千 1.000 |
| 二 2 | 十三 13 | 万 10.000 |
| 三 3 | 十四 14 | 百万 1.000.000 |
| 四 4 | 二十 20 | 億 100.000.000 |
| 五 5 | 二一 21 | 兆 1.000.000.000.000 |
| 六 6 | 三十 30 | **ஜப்பானிய எண்களின் முறை என்பது ஜப்பானிய மொழியில் பயன்படுத்தப்படும் எண் பெயர்கள் ஆகும். எழுத்தில் ஜப்பானிய எண்கள் முழுக்க முழுக்க சீன எண்களை அடிப்படையாகக் கொண்டவை,** |
| 七 7 | 四十 40 | |
| 八 8 | | |
| 九 9 | | |
| 十 10 | | |

### சிங்கள எண்கள்

பண்டைய இலங்கையில் பிராமி எண்கள் பயன்படுத்தப்பட்டன என்று இலங்கை தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டது. இப்பிராமி எண்களின் தொகுப்பாக சிங்கள எண்கள் பரிணமித்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. அவையே கண்டிய காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட தொன்மையான சிங்கள எண்கள் என அறியப்படுகின்றன.

இவையே கண்டியை பிரிட்டிஷ் ஆக்கிரமித்த போது காணப்பட்டவையாகும். இதனை உரு 25 காட்டுகிறது. கண்டியை பிரிட்டிஷ் ஆக்கிரமித்த போது சிங்கள எண்கள் அல்லது சிங்கள இலக்கம் கண்டுபிடிக்கப்பட்டது ஒரு முக்கிய கண்டுபிடிப்பாகும். 1815 இல் கண்டிய தலைவர்களுக்கும் பிரிட்டிஷ் ஆளுநருக்கும் இடையே கையெழுத்திடப்பட்ட கண்டி ஒப்பந்தத்தின் ஆங்கிலப் பிரிவில் அரபு எண்களில் பதினொரு உட்பிரிவுகள் இலக்கமிடப்பட்டுள்ளன. இணையான சிங்கள உட்பிரிவுகள் சிங்கள தொன்மையான எண்களில் இலக்கமிடப்பட்டுள்ளன.

நீங்களும் முயற்சிக்கலாம் 20 பெட்டிகளுள் இருக்கும் ஜப்பான்/சீன எண்களின் பெறுமானங்கள் என்ன?

百一 百四十五


百九十九 二百一

四百 千一

千二百八十九


**விடைகள்- 101, 145,199 201, 400, 1001, 1289**

உரு 25 சிங்கள எண்கள்





உரு 25A சிங்கள எண்கள்

உதாரணம்




புராதன சிங்கள எண் குறியீட்டு முறையில் ஒன்று தொடக்கம் பத்து வரையுள்ள எண்களுக்கும், நூறு வரையான பத்தின் மடங்குகளுக்கும் நூறு மற்றும் ஆயிரத்திற்கும் வெவ்வேறான எண் குறியீடுகள் இருந்தன. இவை உரு 25, 25 B இல் காட்டப்பட்டுள்ளன. உரு 25 A இல் உதாரணங்கள் தரப்பட்டுள்ளன. இங்கு 38 எனும் எண்ணுக்கு 30 இற்குரிய குறியீடும் 8 இற்குரிய குறியீடும் இடப்படுகிறது. 754 ஐச் சுட்ட 7 இற்குரிய குறியீட்டை இட்டு அதனை அடுத்து நூறுக்குரிய குறியீட்டை இட்டு தொடர்ந்து 50 இற்குரிய குறியீடும் 4 இற்குரிய குறியீடும் இடப்படுகின்றன. இவ்வாறே பிறவும்.

உரு 25B சிங்கள எண்கள்




(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 22 பேர்...

நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 14,555 ஆக அதிகரித்துள்ளது. (ம-03)

## குற்றவாளிக்கு...

கப்பம் பெற்றுக்கொள்ளும் நோக்கில் 11 இளைஞர்களை கடத்தியதாக வசந்த கரன்னாகொடவிற்கு எதிராக குற்றப்பத்திரிகை நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனினும், அந்த குற்றப்பத்திரிகை சட்டமா அதிபரினால் விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்தியா, பிரித்தானியா போன்ற நாடுகளில் சட்டமா அதிபர் பதவி அரசியல் நியமனமாக இருந்தாலும் பதவியேற்றதன் பின்னர் சட்டமா அதிபர் சுயாதீனமாக செயற்படுகின்றார். எனினும், இலங்கையில் அந்த நிலைமை இல்லையென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-03)

## கொலையாளிக்கு...

இதனை கூறியுள்ளார்.

முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரன்னாகொட மீது, இறுதி யுத்தம் நடந்த 2008, 2009 காலத்தில் கொழும்பில் வசதி படைத்த தமிழ் குடும்ப இளைஞர்கள் 11 பேரை, கப்பம் பெறுவதற்காக, வெள்ளை வான் மூலம் கடத்தி, கொலை செய்ததாக, குற்றம்சாட்டப்பட்டு வழக்கு நடந்தது.

2008, 2009 வேளையில் எனது தலைமையிலான "மக்கள் கண்காணிப்பு குழு" இந்த கொடுமையை பதிவு செய்து உலகிற்கு அறிவித்தது. இதற்காக எனக்கும் அச்சுறுத்தல் பரிசாகக் கிடைத்தது.

"வந்து சுட்டுவிட்டு போங்கடா" என நான் சொன்னேன்.

கடத்தப்பட்ட இளைஞர்களின் உடல்கள் கூட கிடைக்கவில்லை. காணாமல் போன பிள்ளைகளின் தாய்மார்கள் அழுத அழுகை இன்னமும் என் நெஞ்சில் ஒலிக்கிறது. அன்றைய போராட்டங்கள் மனதில் நிழலாடுகின்றன.

கொழும்பு எம்.பியாக, மக்கள் கண்காணிப்பு குழு அமைப்பாளராக - நான் மற்றும் ரவிராஜ், சிறிதுங்க, விக்கிரமபாகு ஆகியோர் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் பலரை காப்பாற்றினோம். பல கடத்தல்களை தடுத்து நிறுத்தினோம்.

எம்மையும் மீறி பல நடந்தன. வெள்ளை வான் கடத்தல்கள் அரசியல் காரணங்களுக்காக ஆரம்பித்து இது போன்ற கப்பம் பெறவேண்டி நிகழ்ந்தன. 2019ஆம் வருடத்தில் சட்டபூர்வமாக வசந்த கரன்னாகொட மீது சாட்டப்பட்ட இந்தக் குற்றச்சாட்டு மரண தண்டனைக்குரிய குற்றமாகும்.

இன்று இந்த அரசாங்கம் பதவிக்கு வந்த பின், கடந்த மாதம் அவர் மீதான குற்றச்சாட்டுக்களையும், வழக்கையும் சட்டமா அதிபர் வாபஸ் பெற்றார். வசந்த கரன்னாகொட சுதந்திர மனிதனாக நடமாடுகிறார்.

இன்று அவரது "சாதனையை" பாராட்டி "முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரன்னாகொட, வடமேல் மாகாண ஆளுநராக" நியமிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகி உள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-03)

## விபத்துக்குள்ளா...

நேற்று உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் ஊர்காவற்துறை தம்பாட்டியைச் சேர்ந்த சின்னத்தம்பி இலட்சுமணன் (வயது - 66) என்ற முதியவரே உயிரிழந்தவராவார்.

குறித்த முதியவர் கடந்த 7ஆம் திகதி மோட்டார் சைக்கிளில் பயணித்தபோது, லேணர்ஸ் வாகனம் மோதியதில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். எனினும் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

இவரது மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (ம-03)

## வரவு-செலவு...

ரிக்கப்படும் என்ற நம்பிக்கை இருக்கின்றது என யாழ். மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தெரிவித்தார்.

எதிர்வரும் நாட்களில் யாழ். மாநகர சபைக்கான வரவு-செலவுத்திட்டம் யாழ். மாநகர சபையில் யாழ். மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தலைமையில் சமர்ப்பிக்கப்படவிருக்கின்ற நிலையில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்ட யாழ். மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கின்றபோதே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாநகர சபையில் அங்கம் வகிக்கின்ற அனைத்து தலைமைத்துவ கட்சிகளுக்கும் பகிரங்கமாக அன்பான வேண்டுகோள் விடுகின்றேன். யாழ். மாநகர சபையில் எதிர்வரும் ஆண்டுக்கு சமர்ப்பிக்கின்ற வரவு-செலவுத்திட்டத்தினை ஆதரிக்கவேண்டும் என வேண்டுகோள் விடுகின்றேன். ஆனால் நான் நினைக்கவில்லை, மாநகர சபையில் அங்கத்துவம் வகிக்கின்ற தலைமைத்துவக் கட்சிகளின் உறுப்பினர்கள் இந்த வரவு-செலவுத்திட்டத்தினை தோற்கடிக்கும் விதமாக முடிவுகளை எடுப்பார்கள் என நம்பவில்லை.

எனவே ஏகமனதாக அனைத்து கட்சிகளும் ஆதரவு நல்கும் என எதிர்பார்க்கின்றேன்.

இந்த வரவு-செலவுத் திட்டத்திலே நாங்கள் அனைத்து கட்சிகளுடனும் பேசி மக்களால் முன்வைக்கப்படுகின்ற அனைத்து வேலைத்திட்டங்களை உள்ளடக்கியிருக்கின்றோம்.

ஆனாலும் இந்த வரவு-செலவுத்திட்டத்தினை தோற்கடிக்கவேண்டிய தேவை எந்தவொரு கட்சிக்கும் இருக்கும் என கருதவில்லை. அனைத்து திட்டங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளது. மாநகர சபையின் உறுப்பினர்களினால் கொடுக்கப்பட்ட பிரேரணையினை தோற்கடிப்பார்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை என யாழ். மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தெரிவித்தார்.

(ம-03,18,33,104)

## வாகன இறக்கு...

வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

மேலும், பால்மா இறக்குமதிக்காக நிதி ஒதுக்கீடு செய்ய முடியாது எனவும் நிதி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (ம-03)

## ஊழியர்கள்...

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அடுத்த வருடத்திற்கு புதிய அரச உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படமாட்டார்கள்.

அந்நிய செலாவணி பற்றாக்குறையின் தீவிரத் தன்மையே இந்த தீர்மானங்களை எடுக்கக் காரணம் என அவர் சுட்டிக் காட்டினார்.

சில அரச நிறுவனங்களில் ஆளணிகள்அதிகமாக காணப்படுவதாகவும் சில பிரதேச செயலகங்களில் ஆளணிகள் அதிகமாக உள்ளதாகவும் சிலவற்றில் உட்காருவதற்கு நாற்காலி கூட இல்லை அந்தளவிற்கு ஆளணி அதிகமாக உள்ளதாகவும் தெரிவித்தார். (ம-03)

## அரசி...

நீதி அமைச்சின் மீதான விவாதத்தில் உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன், பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டவர்கள்தொடர்பில், அமைச்சர் நாமல் ராஜபக்ஷ வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என்று கோரினார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, கைதிகளின் விடயத்தில், உரிய நடவடிக்கைகளை உறுதிப்படுத்துவதற்கும் விடுதலை தொடர்பில் அரசாங்கம் பொறுப்புடையதாக உள்ளதென குறிப்பிட்டுள்ளார்.

அது ஒரு முறைமையிலானது என்பதை நாம் அனைவரும் புரிந்துக்கொள்ள வேண்டும்.

அதனை செய்வதற்கான சட்ட நடைமுறைகளை நாம் பின்பற்ற வேண்டும்.

நீதி அமைச்சர் அதற்காக செயற்படுகின்றார். நாம் அதனை செய்ய முடியும். அதனை செய்வோம்.

முன்னரும் அதனை நாம் செய்துள்ளோம். அரசியல் ரீதியான அறிவிப்பை நாம் வெளியிட மாட்டோம். ஏனெனில், அது எமது அரசியல் வாக்குறுதி அல்ல.

அரசியல் கட்சி என்ற அடிப்படையில், நீங்கள் எங்களுக்கு உதவி செய்வதில்லை என்பதை நீங்கள் அறிவீர்கள். அத்துடன், நீங்கள் ஒருபோதும் எங்களுக்கு உதவ மாட்டீர்கள்.

ஆனால், நாட்டின் பிரஜை என்ற அடிப்படையிலும் அரசாங்கம் என்ற அடிப்படையிலும் எங்களுக்கு பொறுப்பு உள்ளது.

அதனை நாங்கள் நிறைவேற்றுவோம் என்று அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (ம-03)

## கொலையாளி...

டின் சட்டத்துக்கு அப்பால் தமது தனிப்பட்ட சட்டத்தின் நடைமுறைகளாகும் என்று அவர் குறிப்பிட்டார்.

நீதியமைச்சின் நிதியொதுக்கீட்டு விவாதத்தில் நேற்று பங்கேற்று உரையாற்றிய அவர், இந்த குற்றச்சாட்டை முன்வைத்தார். (ம-03)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 09/12/2021
சீட்டிழுப்பு இலக்கம் 1179
வெற்றி இலக்கங்கள்
மிதுனம் 4 8 7 2 3 9

மெகா பவர்
திகதி 09/12/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0959
S 17 05 11 27 64

மஹஜன சம்பத
திகதி 2021/12/09
சீட்டிழுப்பு இலக்கம் 4611
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
R 9 1 1 3 6 3

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 09.12.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2906
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
K 01 03 66 79

தன நிதானய
திகதி - 2021.12.09
சீட்டிழுப்பு இலக்கம் - 641
M 06 09 33 34
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

அத கோடிபதி ADA KOTIPATHI
கிழமை: வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1414
வர்ணம்: கடும் நீலம்
சீட்டிழுப்பு திகதி: 09.12.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 5,534,600
வெற்றி இலக்கங்கள் 25 27 33 50 ஆங்கில எழுத்து B

சனிதா
கிழமை: வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 3749
வர்ணம்: சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 09.12.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 3,701,580
வெற்றி இலக்கங்கள் 25 50 60 61 ஆங்கில எழுத்து Q

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,594,915/=
திகதி 09.12.2021
வெற்றி வாரம் 3300
வர்ணம் கபிலம்
வெற்றி இலக்கங்கள் 13 17 41 47 மீனம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,533,760/=

சங்வர்தன வாசனாவ
திகதி: 2021-12-09
வெற்றி வாரம்: 466 | வர்ணம்: நீலம்
சுப்பர் ஜக்பொட் ரூ. 11,438,924/-
P 50 56 32 7
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,933,520/-
ரூ. 11,560,764/-

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1588
நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 09.12.2021
தினம் வியாழன்
G 37 39 48 53
அடுத்த சுப்பர் ஜக்பொட் :- 73,940,775/=


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (8958)

**076 825 7716** (ஆகாஸ்)

## தச்சுத் தொழிலாளர்கள் தேவை

கோண்டாவிலில் இயங்கிவரும் தொழிற்சாலைக்கு தச்சுத்தொழில் (MDF) வேலைக்கு தொழிலாளர்கள் தேவைப்படுகின்றனர். அனுபவமுள்ள அல்லது தொழில் பழக விருப்பமுள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும். (8992)

**077 2607614 / 077 7481696**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் சுன்னாகம் கந்தரோடைப் பகுதியில் கணக்கர் வளவு 10 பரப்பு காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)**

2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடிப் பாதையுடன் சுன்னாகம் பஸ் நிலையத்தில் இருந்து 800 மீற்றர் தூரம்

**பார்வையிடும் நேரம்**

காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை (தரகர் தேவையில்லை) விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (8989)

தொடர்புகளுக்கு

**077 814 7389, 077 614 7333**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஊரெழு பிள்ளையார் கோவில் வடக்கு வீதியில் 10 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.
(Lanka Farm அருகாமையில்)

**1 பரப்பின் விலை 12 இலட்சம்**

**077 911 6983**
(8997) **077 288 0152**

## DCM - யாழ் நகர் வணிகக் கல்வி

(வேம்படி உயர்தர பாடசாலை அருகாமை)

இறுதிக் கருத்தரங்கு

**A/L 2021**

- முற்றிலும் எதிர்பார்க்கை வினாக்கள்
- 30 மணித்தியாலங்கள் (30+)
- வெளி மாணவர்களும் பங்குபெற்ற முடியும்
- கையேடுகள் வழங்கப்படும்

ஆரம்பம் : 13.12.2021
திங்கள் 2.30 - 5.30 மணிவரை
(C-3211)

**N.S.KAPIL** BBM (Hons), spl.in M.mar
**077 778 9815**
**077 278 8489**

## கணக்கீடு

புதிய பிரிவு புதிய அலகு **A/L 2023**
'ஆரம்ப அலகிலிருந்து ஆரம்பமாகின்றது'
நாளை 2 pm
**A/L 2022** பங்குடைமை நாளை 4 pm
- குறைந்த கட்டணம் நிறைவான சேவை
- ஆதாரம் கடந்தகால முன்னணி பெறுபேறுகள்

(8993)

**S. தவா**
B.com(Hons.) Acc.spl, PGDE, M.A in Edu(Hons.)
பிரத்தியேக வகுப்பு
இல.17, பிரம்படி ஒழுங்கை, கொக்குவில். **077 239 5858**

## வேலையாட்கள் தேவை

புன்னாலைக்கட்டுவன் வடக்கில் இயங்கிவரும் வீட்டுப் பாவனை பொருட்கள் உற்பத்தி நிலையத்திற்கு பெண் வேலையாட்கள் தேவை. (8990)

**077 557 7750**

## வேலை ஆட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் தங்க நகை அடகு சேவை நிலையத்திற்கு காசாளர் தேவை. (பெண்கள்)
(O/L, கணினி அறிவு)
(8998)

தொடர்பு
**077 784 0379**

## விரைவு பொதிகள் சேவை

**V2 TRAVELS**

**UK-975 /=Kg**

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- நெல்லியடி
- புதுக்குடியிருப்பு
- பருத்தித்துறை
- புத்தூர்
- கொடிகாமம்
- சுன்னாகம்
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- மானிப்பாய்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி

(C-3132)

**0768226240** DHL

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
(C-3169)

**V2 TRAVELS**

எமது கிளைகள்
கிளிநொச்சி, சுன்னாகம், சாவகச்சேரி, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, திருகோணமலை, வல்வெட்டித்துறை, கோப்பாய், புத்தூர்

16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 15'000/-
பயிற்சியின்போது - 10'000/-

0777-068-777
v2vacancies@gmail.com

## 45 ஆம் நாள் ஆன்ம இளைப்பாற்றி

அழைப்பு





கடந்த 27.10.2021 புதன்கிழமை
விண்ணுலக வாழ்வை
ஏற்றுக்கொண்ட எங்கள் புதல்வி

**கமல்ராஜ் இலக்கியா**
(தமிழ், செல்லம்)

அவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக
இன்று வெள்ளிக்கிழமை
காலை 8.00 மணிக்கு
புன்னாலைக்கட்டுவன்
புனித இராயப்பர் ஆலயத்தில்
ஒப்புக்கொடுக்கப்படும் இரங்கல்
திருப்பலியிலும் அதனைத் தொடர்ந்து
எமது இல்லத்தில் நடைபெறும்
மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு
உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும்
சக கல்விச் சமூகத்தினரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

ஊரெழு கிழக்கு.
தொ.பே: 076 539 5489 (9001)
இங்ஙனம்:-
[illegible]

## காணி விற்பனைக்கு




யாழ்ப்பாணம் பெரியவிளான் அந்தோனியார் வீதியில் 8 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

1 3/4 பரப்பாகவும் 1 1/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
14 அடி பாதையுடன்
விளான் சந்தியில் இருந்து 500 மீற்றர் தூரம்.

**பார்வையிடும் நேரம்**

காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை
**தரகர் தேவையில்லை.**
**விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.**

(8991)

**077 614 7333**
**077 814 7389**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.12.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.